Shalom


தனி பிரதி ரூ. 5/–
ஆண்டு சந்தா ரூ. 60/–

# அன்பு பகிர்வு இயக்கம்

## செய்திமலர்

மலர் : 8
இதழ் : 5
மார்ச் – 2012






**ஜெபத்தைக்
கேட்கிறவரே,
மாம்சமான
யாவரும்
உம்மிடத்தில்
வருவார்கள்**

சங்கீதம் 65 : 2

ஆசிரியர் சகோ. வே. தேவதாஸ்



## சுதேச ஊழியர் சாட்சி

# சகோ. அஜ்மீர்சிங் டாமோர்

**தாம்னிச்சன்னா, ம.பி.**

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! எனது பெயர் அஜ்மீர்சிங் டாமோர். நான் மத்தியப்பிரதேசம், ஜாபுவா மாவட்டத்திலுள்ள தாம்னிச்சன்னா கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி.

நான் தீவிரமான புறமதத்தைச் சேர்ந்தவன். எங்கள் குடும்பத்தில் யாருக்கும் இயேசு கிறிஸ்துவைக் குறித்து தெரியாது. நாங்ககள் பாவம், சாபம், அசுத்த ஆவிகளின் பிடி போன்ற கட்டுகளில் சிக்கி வாழ்ந்து வந்தோம். குறிப்பாக நான் பாவங்களை பாவம் என்று அறியாமல் செய்து வந்தேன்.

இந்த சூழ்நிலையில் நான் திடீரென்று சுகவீனப்பட்டேன். அநேக மருத்துவர்களிடம் சென்றும் மருத்துவம் செய்தும் பலனில்லை. பின்பு பல மந்திரவாதிகளையும் நாடினேன். பல ஆயிரம் ரூபாய்கள் செலவு செய்து அநேக மந்திரக் கிரியைகள் செய்தும் பலனில்லை, ஆகையால் எனது வாழ்வில் சந்தோஷம், சமாதானம், நிம்மதி இல்லாமலும், நான் நம்பின தெய்வங்கள் என்னை கைவிடப்பட்ட நிலையிலும் சோர்ந்து போனேன். வேதனையோடு இருந்த நேரத்தில் எங்கள் கிராமத்தின் பக்கத்துக் கிராமமான பாடல்வா கிராமத்தில் உள்ள ஷாலோம் திருச்சபையைக் குறித்துக் கேள்விப்பட்டேன். அங்கு செல்லும்படியாக என்னை யாரோ உந்துவதை என்னால் உணரமுடிந்தது.

ஆகவே ஒரு ஞாயிற்றுக்கிழமை பாடல்வா கிராம சபைக்குச் சென்றேன். அங்கு ஊழியம் செய்து வந்த போதகர் ரமேஷ் M. வாசுனியா அவர்களும், சபையாரும் எனக்காக பாரத்தோடு தேவனிடத்தில் விண்ணப்பம் செய்தார்கள். உடனடியாகவே தேவன் எனக்கு பிசாசின் கட்டுகளில் இருந்து பூரண விடுதலையைக் கொடுத்தார். எனது சுகவீனம் என்னை விட்டு நீங்கிற்று. அதன்பின் இயேசு கிறிஸ்துவே மெய்யான தேவன் என்று விசுவாசித்து எனது பாவங்களை அறிக்கையிட்டு இரட்சிப்பினைப் பெற்று தொடர்ந்து சபைக்குச் செல்ல ஆரம்பித்தேன்.

அதன்பின் தேவன் என்னை அபிஷேகித்து ஊழியத்திற்கென்று அழைத்தார். அந்த அழைப்பினை ஏற்று நான் குடும்பமாக ஊழியத்திற்கென்று அர்ப்பணித்து, ஷாலோம் ஊழியத்துடன் இணைந்து எங்கள் சொந்த கிராமத்தை மையமாக வைத்து ஊழியம் செய்து வருகிறோம்.

எங்கள் ஊழியங்களுக்காகவும், எனது குடும்பத்திற்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

இந்த சுதேச ஊழியரைத் தாங்குவோர் : **St. Immanuel CSI Church, Perianayagapuram, Tuticorin Dist.**

# உங்கள் சகோதரனிடமிருந்து....



***கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே!***

ஆண்டவரும் இரட்சகராகிய இயேசுவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் அன்பு வாழ்த்துக்கள்.

தேவனுடைய பெரிதான கிருபையினாலும், உங்கள் யாவரின் ஜெபங்களாலும் பீல் மக்கள் மத்தியில் ஊழியங்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. கடந்த மாதம் முழுவதும் தேவன் பெரியக் காரியங்களைச் செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

கடந்த பிப்ரவரி மாதத்தில் சுதேச ஊழியர் கூடுகைகளை தேவன் அபரிமிதமாக ஆசீர்வதித்தார். மத்தியப்பிரதேசத்தில் 20 ஊழியர்களுக்கு 1 வருட சிறப்பு ICT பயிற்சி ஆரம்பிக்க தேவன் கிருபை தந்தார். மேலும் 42 புதிய சுதேச ஊழியர்களை தெரிந்தெடுக்க தேவன் கிருபை தந்தமைக்காகத் தேவனைத் துதிக்கிறேன். மார்ச் மாதத்தில் அந்த ஊழியர்களுக்கு 1 மாத சிறப்புப் பயிற்சி கொடுக்க இருக்கிறோம். இவர்களை ஜெபித்துத் தாங்கக் கூடிய ஆதரவாளர்கள் எழும்பும்படியாக ஜெபியுங்கள்.

பிப்ரவரி மாதத்தில் 5 & 19 தேதிகளில் தேர்வு எழுதும் நமது பீல் ஆதிவாசி மாணவர்களுக்கான சிறப்புக் பிரார்த்தனைக் கூட்டங்கள், குஜராத் & மத்தியப்பிரதேசத்தில் நடத்தப்பட்டது. வரும் மார்ச் 4ம் தேதி இராஜஸ்தானில் நடைபெற உள்ளது. சுமார் 700க்கும் அதிகமான ஆதிவாசி மாணவர்கள் இதன் மூலம் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். இவர்கள் சிறந்த முறையில் தேர்வு எழுதவும், நல்ல ஆசீர்வாதமான எதிர்காலத்தை தேவன் கொடுக்கவும் ஜெபியுங்கள்.

கடந்த 13ம் தேதி Sharing Love Mission & Shalom Charity Mission – க்கான செயற்குழு கூட்டங்கள் (Board Meetings) தூத்துக்குடியிலுள்ள நமது தலைமை அலுவலகத்தில் வைத்து நடத்தும்படியாக தேவன் கிருபை செய்தார். பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலின்படி நேர்த்தியாக கூட்டங்கள் நடைபெற்றன. நமது இயக்கங்களின் செயற்குழு உறுப்பினர்களுக்காக தேவனைத் துதிக்கிறேன். ஒவ்வொருவருக்கும் நன்றி கூறுகின்றேன். தேவ கிருபையால் பிப்ரவரி 20 முதல் 23 ம் தேதி வரை நமது பணித்தளங்களிலுள்ள தாகோத், சோட்டா உதய்பூர், அந்தர்வேலியா, கும்புரா ஆகிய பகுதிகளில் மருத்துவ முகாம்கள் நடத்த தேவன் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! Dr. Abel, Dr. Jolly Abel, Dr. Inba ஆகியோர் தலைமையில் முகாம்கள் நடைபெற்றன. தேவன் ஆசீர்வதித்தார்.

பிப்ரவரி 19,20 தேதிகளில் பீஹார், பாட்னாவிலுள்ள Bihar Christian Church மூலமாக ஒழுங்கு செய்யப்பட்ட ஆவிக்குரிய எழுப்புதல் முகாமில் தேவ செய்திகளை வழங்க தேவன் கிருபை செய்தார். Rev. S.D. பொன்ராஜ் அவர்கள் தலைமையில் 120 போதகர்கள் குடும்பங்கள் மற்றும் 200 சபை மூப்பர்கள் பங்கு பெற்றார்கள். பரிசுத்த ஆவி அபிஷேகத்தையும் வல்லமையையும்

நம் தலைமுறையில் பீஹார் சந்திக்கப்பட வேண்டும் என்ற தரிசனத்தையும், தேவ ஆசீர்வாதத்தையும் பெற்றனர்.

மார்ச் & ஏப்ரல் மாதங்களில் நம் ஊழியங்களைத் தாங்கி வரும் போதகர்கள் & தேவ பிள்ளைகள் அநேகர் பணித்தளத்திற்கு வருகை தந்து ஊழியங்களைப் பார்வையிடவும், ஆலயங்களைப் பிரதிஷ்டை செய்யவும் இருக்கிறார்கள். இதற்காக ஜெபியுங்கள்.

பிப்ரவரி 23ம் தேதி என்னுடைய 52வது பிறந்த நாளைக் காண தேவன் கிருபை செய்தார். அடியேனுக்காக ஜெபித்து, ஆசீர்வதித்து, வாழ்த்துக்கள் மற்றும் வெகுமதிகளை அனுப்பின உங்கள் யாவருக்கும் என் அன்பான வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து மார்ச் மாதம் முழுவதும் நடைபெறவுள்ள கூடுகைகள், சிறப்புக் கூட்டங்கள் அனைத்திற்காகவும் ஜெபியுங்கள். ஏப்ரல் மாதத்தில் நடைபெறவுள்ள CBC பயிற்சிக்காக, 600 ஆசிரியர்களுக்கு பயிற்சி கொடுக்கவும் 30 ஆயிரம் பிள்ளைகளுக்கு கையேடுகளைத் தயாரிக்கவும் தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

சென்னையில் முன்னேற்றப்பணிகளை இன்னும் சிறப்பாக செய்யும்படியாகவும், வளர்ந்துவரும் பணிகளை துரிதப்படுத்தவும் 1000 புதிய ஆதரவாளர்கள் மற்றும் 100 பிரதிநிதிகள், 100 ஜெபக்குழுக்களை எழுப்பவும் ஜெபித்துத் தீர்மானித்து, முகப்பேரில் புதிதாக அலுவலகம் ஆரம்பிக்க தேவன் கிருபை செய்தார். ஏப்ரல் 1ம் தேதி முதல் புதிய திட்டங்களுடன் இந்த அலுவலகத்தை செயல்படுத்த ஜெபியுங்கள். நமது செயற்குழு உறுப்பினர் சகோ. சுதந்திர சிங் அவர்கள் தலைமையில் நம் முன்னேற்றப் பணியாளர் சகோ. எபனேசர் டேனியல் அவர்களும் சென்னையிலுள்ள நமது பிரதிநிதிகளும் இணைந்து செயல்படுகிறார்கள். 12.02.2012 சனிக்கிழமை சென்னையில் நடைபெற்ற சிறப்பு மிஷனெரி கூடுகையில் 50க்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

மத்தியப்பிரதேசத்தில் அந்தர்வேலியா கிராமத்தில் நடைபெற்று வருகிற Compassion Project மூலம் 300 ஆதிவாசி பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்பட்டு வருகிறார்கள். அங்கு பிள்ளைகள் படிப்பதற்காக Study Hall கட்டப்பட்டு வருகிறது. அதற்காக 3 லட்சங்கள் அவசரமாகத் தேவைப்படுகிறது. தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். தேவனால் ஏவப்பட்டப்படி உதவி செய்ய உங்களையும் அன்புடன் கேட்கிறேன்.

**"உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார்;**
**அவர் வல்லமையுள்ளவர், அவர் இரட்சிப்பார்; அவர் உன்பேரில்**
**சந்தோஷமாய் மகிழ்ந்து, தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார்;**
**அவர் உன்பேரில் கெம்பீரமாய்க் களிகூருவார்".** செப்பனியா 3:17

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*

(பேராயர் தேவதாஸ்)

என்னுடன் தொடர்பு கொள்ள
09377445468



# ù TúUù Vm

சிறப்புச் செய்தி : **வஹிதா தேவதாஸ்**

**“ஜெபமே ஜெயம்! ஜெபம் மனிதனுடைய வாழ்க்கையை மறுரூபமாக்குகிறது! ஜெபம் தேசத்தை அசைக்கிறது! ஜெபம் தேசத்திற்கு ஷேமத்தை கொண்டு வருகிறது”.**

சுமார் 16 வருடங்களுக்கு முன்பாக பாஸ்டர். பால் யாங்கிசோ, கொரியா தேசத்தை சேர்ந்தவர்கள் 10 இலட்சம் அங்கத்தினர்களை கொண்ட சபையை உருவாக்கினவர்கள், கொரிய தேச எழுப்புதலில் பெரிய பங்கை பெற்றவர்கள் சென்னை பட்டினம் வந்து, தமிழ்நாட்டில் உள்ள பாஸ்டர்களுக்கென்று விசேஷ கருத்தரங்கு நடத்தினார்கள்.

இந்த கருத்தரங்கில் குடும்பமாக பங்கு பெற்றோம். அப்பொழுது அவர்கள் கூறிய காரியம், கொரியா தேசத்தின் எழுப்புதலுக்கு காரணம் என்னவென்று அறிய வாஞ்சையோடு இருக்கிறீர்கள் அல்லவா? என்னுடைய பதில் ஒன்றே ஒன்றுதான். அது ஜெபம், ஜெபம் தான் கொரியாவில் எழுப்புதலை கொண்டு வந்தது என்று பிரசங்கித்தார்கள். மறுநாளில் என்ன செய்தி கொடுப்பார்கள் என்று ஆவலோடு காத்திருந்தவர்களுக்கு அவர்கள் கொடுத்த செய்தி ஜெபம் தான். மூன்றாவது நாளில் ஜெபத்தை குறித்தே பேசி கருத்தரங்கு முடிவு பெற்றது.

அந்த கருத்தரங்கில் ஜெபத்தை குறித்த காரியத்தில் என்னைத் தொட்ட காரியம் என்னவென்றால், கொரியாவில் உள்ள பாஸ்டர் பால்யாங்கி சோ அவர்கள் சபையில் உள்ள சாதாரணமான விசுவாசிகளும் சிறுகுழந்தைகளும் தினமும் ஒரு மணி நேரம் ஜெபிப்பார்களாம். மட்டுமல்லாமல், அவர்கள் சபையில் உள்ள உதவி பாஸ்டர்கள் 800 பேர் தினமும் மூன்று மணி நேரம் ஜெபிப்பார்களாம். தலைமைப் போதகரான **பால்யாங்கி சோ** அவர்கள் தினமும் ஏழு மணி நேரம் ஜெபிப்பார்களாம்.

இந்த காரியம் என்னுடைய ஜெப வாழ்க்கையில் ஒரு எழுப்புதலை கொண்டு வந்தது. அந்த நாளிலிருந்து என்னுடைய ஜெப வாழ்க்கை மாறியது. ஒரு விண்ணப்பத்தின் ஆவி ஊற்றப்பட்டது. அதே காரியத்தை பீல் மக்கள், விசுவாசிகளுக்கும் அறிவித்து ஜெபித்தபோது, ஷாலோம் சபைகளிலும், படிப்பறிவில்லாத ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்கள், வாலிபர்கள் எல்லார் மேலும் ஒரு ஜெப விண்ணப்பத்தின் ஆவி ஊற்றப்பட்டது. வெகு விரைவில் சபை வளர்ச்சியை கண்டோம்.

இப்பொழுதும், ஜெபத்தைக் குறித்து 4 காரியங்களை தியானிப்போம். தனி ஜெபம், குடும்ப ஜெபம், நண்பர்கள் ஜெபம், சபையார் ஜெபம். ஜெபம் ஜெயத்தை கொண்டு வரும். எழுப்புதலை கொண்டு வரும்.

**தனி ஜெபம்**

இயேசுவை அறிந்த நாம் யாவருக்கும் தனி ஜெபம் அவசியம். அதிகாலையிலேயே எழும்பி தேவனுடைய சமுகத்தில் தனியாக அமர்ந்திருந்து உறவாட வேண்டும். தனிப்பட்ட முறையில் நமக்கும் தேவனுக்கும் ஒரு சம்பந்தம் வேண்டும். தனிப்பட்ட முறையிலான உறவு

இல்லையென்றால், நாம் கிறிஸ்துவை உடையவர்களாக இருக்க முடியாது. தனி ஜெபம் தனிப்பட்ட மனிதர்களுடைய வாழ்க்கையில் ஆசீர்வாதத்தைக் கொண்டு வருகிறது. உதாரணமாக, ஆதி 32:24–ல் பாருங்கள் யாக்கோபு பிந்தித் தனித்திருந்தான்.

அப்பொழுது தேவன் அவனோடு உறவாடினார். ஆதி 32. 26–29 வசனத்தில் யாக்கோபு, நீர் என்னை ஆசீர்வாதித்தாலொழிய உம்மை போக விடேன் என்று கூறி, தேவனோடு தனியாக போராடி ஆசீர்வாதத்தை பெற்றுக் கொண்டான். ஆம் பிரியமானவர்களே, ஆசீர்வாதம் என்றால் எல்லோருக்கும் ஆசை தான். ஆனால் தனியாக ஜெபிக்க வேண்டுமென்றால் நேரம் இல்லை என்பார்கள். தனி ஜெபம் தான் மனிதனுடைய வாழ்க்கையில் ஆசீர்வாதத்தைக் கொண்டு வருகிறது.

அடுத்தபடியாக தனி ஜெபத்தில் தேவனுடைய வழிநடத்துதல் கிடைக்கும். ஆதி 24:7ம் வசனத்தில் ஆபிரகாம் தன்னுடைய குமாரனாகிய ஈசாக்குக்கு பெண் கொண்டுவரும்படிக்கு, தன்னுடைய ஊழியக்காரரான எலியேசரிடம் கூறுவதை பார்க்கிறோம். தேவன் தம்முடைய தூதனை உனக்கு முன்பாக அனுப்புவார் என்று கூறி, காரியத்தை எலியேசரிடம் ஒப்புக் கொடுப்பதை பாருங்கள். எப்படி தன்னுடைய ஒரே குமாரனுக்கு பெண் பார்க்கும் காரியத்தை தன்னுடைய ஊழியக்காரரின் கையில் ஒப்புக் கொடுக்க முடியும் என்று நினைத்தால் மிக ஆச்சரியமாக உள்ளது. ஆனாலும், உண்மை என்னவென்றால் எலியேசர் கர்த்தருக்கு பயந்தவன். கர்த்தரை முன்பாக நிறுத்தி ஜெபிப்பவன் என்பதை ஆபிரகாம் அறிந்திருந்தான். ஆதி 24 : 11,12.

இந்த காரியத்தை ஆபிரகாம் கூறின உடனே, எலியேசர் தனக்குள்ளே ஜெபிக்க ஆரம்பித்தான். என் எஜமானாகிய ஆபிரகாமுக்கு தேவனாயிருக்கிற கர்த்தாவே இன்றைக்கு நீர் எனக்கு காரியம் சித்திக்கப்பண்ணி என் எஜமானாகிய ஆபிரகாமுக்கு தயவு செய்தருளும் என்று தனியாக ஜெபிக்கிறான். ஆதி 24:45–ல் இதை தன் இருதயத்தில் சொல்லி முடிக்குமுன்னே ரெபேக்காளை காண்கிறான். ஆதி24:48 ம் வசனத்தில் மறுபடியும் தலைகுனிந்து கர்த்தரை பணிந்து கொண்டு என்னை நேர்வழியாய் நடத்தி வந்த என் எஜமானாகிய ஆபிரகாமின் தேவனாயிருக்கிற கர்த்தரை ஸ்தோத்திரிக்கிறேன்.

ஆம் பிரியமானவர்களே! தனி ஜெபம் நம்மை கர்த்தருடைய வழியில் நடத்தும், நேர் வழியில் நம்மை நடத்தி செல்லும். நம் வாழ்க்கையில் எந்த காரியமானாலும் நாம் தனியாக ஜெபிக்கும்போது கர்த்தரால் வழிநடத்தப்படுவோம்.

## குடும்ப ஜெபம்

**“குடும்ப ஜெபம் இல்லாத வீடு கூரையில்லாத வீடு”** என்பது வழக்க சொல். அது உண்மை. குடும்ப ஜெபம் தான் குடும்பத்தைக் கட்டும். பாதுகாக்கும். இரட்சிக்கும். ஆதியாகமம் 6:9–ல் நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும், உத்தமனுமாயிருந்தான். நோவா தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்தான். ஆதியாகமம் 6:18–ல் உன்னுடனே என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன். நீயும் உன்னோடே கூட உன் குமாரரும், உன் மனைவியும் உன் குமாரரின் மனைவிகளும் பேழைக்குள் பிரவேசியுங்கள். ஆதியாகமம் 7:1–ல் இந்த சந்ததியில் உன்னை எனக்கு முன்பாக நீதிமானாகக் கண்டேன். பாருங்கள் தேவன் பூமியை அழிக்க இருந்த திட்டத்தில் அந்த நாட்களில் இந்தச் சந்ததியில் நோவாவின் முழுக் குடும்பம் பாதுகாக்கப்பட்டது.

நோவா மட்டுமல்லாமல், அவன் குடும்பத்தாரும் கர்த்தரைக் குறித்த அறிவை பெற்றிருந்தார்கள். குடும்பமாய் விசுவாசித்திருந்தார்கள். எந்த பிள்ளையோ, மருமக்களோ, மனைவியோ எதிராகப் பேசவில்லை. காரணம் குடும்பமாக கர்த்தரை சேவித்தார்கள். நோவாவின் வார்த்தையை ஏற்றுக்கொண்டார்கள். ஆகையால் கர்த்தர் முழுக்குடும்பத்தையும் பாதுகாத்தார். இன்னும் கூட, உலகத்தில் என்ன நடந்தாலும், சுனாமியோ, பூமி அதிர்ச்சியோ, விஷக்காய்ச்சலோ, தீவிரவாதமோ, எந்த பயமோ வந்து நெருக்கினாலும் நீங்கள் குடும்பமாய் ஜெபித்து தேவனை தொழுது கொண்டால், உங்கள் குடும்பம் முழுவதும் பாதுகாக்கப்படும்.

அடுத்தப்படியாக யோபு 1:5–ல் பார்க்கிறோம். யோபு தன் குடும்பத்திற்காகவும், பிள்ளைகளுக்காகவும், தகனபலிகளை செலுத்தியுள்ளான் என்பது தெரிகிறது. யோபு தன்னுடைய குமாரர் ஒரு வேளை பாவம் செய்து, தேவனை தங்கள் இருதயத்திலே தூஷித்திருப்பார்கள் என்று சொல்லி அவர்களை அழைத்தனுப்பி, பரிசுத்தப்படுத்தி, அதிகாலமே எழுந்து, அவர்கள் எல்லாருடைய இலக்கத்தின்படியேயும் சர்வாங்க தகனபலிகளை செலுத்துவான். இந்தப் பிரகாரமாக யோபு அந்நாட்களிலெல்லாம் செய்து வருவான்.

குடும்பமாக பிள்ளைகளுக்காக, யோபு மன்றாடினதை பாருங்கள். யோபு ஒரு நல்ல தகப்பன். யோபுவை குறித்து கர்த்தரே சாட்சி கொடுக்கிறார். கர்த்தர் பிசாசிடம் சவால்விடுகிறார். என் தாசன் யோபு உத்தமன், சன்மார்க்கன், தேவனுக்கு பயந்தவன், பொல்லாப்புக்கு விலகுகிறவன், அவனைப் போல் பூமியில் ஒருவனும் இல்லை என்றார்.

யோபு தன் குடும்பத்திற்காக, குடும்பமாக பலிகளை செலுத்தினவன். அவன் குடும்பத்தில் வந்த பெரிய சத்துருவின் போராட்டத்திலிருந்து அவன் வெற்றி பெற்று, இரட்டத்தனையான ஆசீர்வாதத்தைப் பெற்றான். பிரியமான தேவ பிள்ளைகளே, இந்த காலத்தில் கிறிஸ்தவர்கள் கூட, பிசாசின் போராட்டம் என்றும், பில்லிசூனியம் என்றும் மிகவும் பயந்து நடுங்குகிறார்கள் ஏன்? குடும்பத்தில் தவறாமல் குடும்ப ஜெபம் ஏறெடுத்தால், பிசாசின் மேல் வெற்றியை மேற்கொண்ட யோபுவை போல நாமும் வெற்றி பெறலாமே.

அப் : 10:2–ல் கொர்நேலியு குடும்பத்தை பாருங்கள். அவன் தேவ பக்தியுள்ளவனும், தன் வீட்டாரனைவரோடும் கூட தேவனுக்கு பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களை செய்து எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தான்.

வீட்டாரனைவரோடும் கூட தேவனை நோக்கி ஜெபம்பண்ணி கொண்டிருந்தான். அவனுடைய ஜெபம், தருமங்கள் தேவசந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது. ஆகையால் தேவன் தம்முடைய ஊழியக்காரரான பேதுருவை அனுப்பி அவர்களுடைய முழுக் குடும்பத்தையும் இரட்சித்தார், அபிஷேகித்தார், மட்டுமல்லாமல், (அப்: 10:24) கொர்நேலியுவின் உறவின் முறையாரையும், அவனுடைய விசேஷித்த சிநேகிதரையும் வரவழைத்து ஜெபித்தான். அந்த நாளிலே பேதுரு மூலமாக அனைவரும் இரட்சிப்பையும், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும் பெற்றுக்கொண்டார்கள்.

ஆகவே நாம் குடும்பமாக ஜெபிக்கும் போது நமது குடும்பம் இரட்சிக்கப்படுவது மட்டுமல்லாமல், நமது உறவினர்கள், சிநேகிதர்களும் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்வது நிச்சயம்.

**நண்பர்கள் ஜெபம்**

இயேசுவோடு கூட 12 சீஷர்கள் இருந்தாலும் கூட பேதுரு, யோவான், யாக்கோபு ஆகிய மூன்று பேரும் நெருங்கிய நண்பர்களாக இயேசுவோடு இருந்தார்கள். லூக்–9:28, 29–ம் வசனத்தில் இயேசு பேதுருவையும், யோவானையும், யாக்கோபையும் கூட்டிக்கொண்டு ஜெபம்பண்ணுகிறதற்கு ஒரு மலையின் மேல் ஏறினார். அவர் ஜெபம் பண்ணுகையில் அவருடைய முகரூபம் மாறிற்று. அவருடைய வஸ்திரம் வெண்மையாகி பிரகாசித்தது. நண்பர்கள் தேவனுடைய மகிமையின் பிரகாசத்தை கண்டார்கள். நாமும் நண்பர்களோடு இணைந்து ஜெபித்தால் தேவனுடைய மகிமையை காணலாம்.

தரிசனங்களை காணலாம். நம்முடைய முகமும் மாறி நாம் தேவசாயலை அடையலாம். சந்தோஷம் மகிழ்ச்சி உண்டாகும்.

அப் – 16:25–30 வசனங்களில் பவுலும், சீலாவும் நண்பர்கள். இணை ஊழியர்கள். இவர்கள் சேர்ந்து ஊழியம் செய்து வந்தார்கள். ஆனால் ஒருநாளில் அநேக அடிகள் பட்டு, சிறைச்சாலையில் இருக்கும்போது கூட இரண்டு பேரும் ஜெபம்பண்ணி, தேவனை துதித்துப் பாடினார்கள். அப்பொழுது சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாய் பூமி மிகவும் அதிர்ந்தது. உடனே கதவுகளெல்லாம் திறவுண்டன. எல்லாருடைய கட்டுகளும் கழன்றுபோயிற்று. என்ன ஆச்சரியம்! உபத்திரவ நேரத்திலும் இரண்டு நண்பர்கள் இணைந்து நடுராத்திரியிலே ஜெபிக்கும் போது அவர் தங்களுடைய கட்டுகளும், மற்றவர்களுடைய கட்டுகளும் தெறிபட்டன. மட்டுமல்லாமல் சிறைச்சாலை அதிகாரி குடும்பமும், அவனோடு கூட அனைவரும் இரட்சிப்பைப் பெற்று ஞானஸ்நானம் பெற்றார்கள்.

மட்டுமல்லாமல், அப் – 16:13–ல் பவுலும், தீமோத்தேயுவும் நல்ல நண்பர்கள். இவர்களும் ஓய்வுநாளில் பட்டணத்திற்கு வெளியே போய், ஆற்றினருகே வழக்கமாய் ஜெபம் பண்ணுகிற இடத்தில் இருந்து ஜெபம்பண்ணி வந்தார்கள் என்று தெரிகிறது. இவ்வாறு ஜெபித்ததினால் தான் ஐரோப்பா கண்டத்தின் முதல் விசுவாசியாக லீதியாள் என்ற பெண்ணை தேவன் தெரிந்து கொண்டார்.

மத் 18–19,20–ன்படி இரண்டுபேர் தாங்கள் வேண்டிகொள்ளப்போகிற எந்த காரியத்தை குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும்.

மட்டுமல்லாமல், லேவி 26:8–ன் படி உங்களில் ஐந்துபேர் நூறுபேரைத் துரத்துவார்கள்; உங்களில் நூறுபேர் பதினாயிரம்பேரைத் துரத்துவார்கள்; ஆகையால் நண்பர்களாய் சேர்ந்து, வீணான காரியங்களை குறித்து பேசி நேரத்தை வீணடிக்காதபடி, ஒருமனதோடு சேர்ந்து ஜெபித்து பெரிய காரியங்களை தேவனுக்காக செய்வோம்.

**சபையாக ஜெபம்**

சபையாராக விசுவாசிகளாக கூடி ஜெபிக்க வேண்டும். ஆதிகால திருச்சபையினர் எல்லாரும் ஒன்றுகூடி ஜெபித்தார்கள். அப் 4:30–32 வசனங்களில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும், ஒரே மனதுமுடையவர்களாய்

ஜெபித்தார்கள். அப்பொழுது அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, தேவ வசனத்தை தைரியமாய் சொன்னார்கள்.

சபையில் ஜெபிக்கும் போது, மூன்று காரியங்கள் நடந்ததை பார்க்கிறோம். இடம் அசைந்தது. பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள், தைரியமாய் தேவ வசனத்தை சொன்னார்கள். ஆம் பிரியமானவர்களே சபையார் ஜெபிக்கும் போது நிச்சயம் நமது இடம் அசைக்கப்படும். சுற்றியுள்ள புற இன மக்கள் அசைக்கப்படுவார்கள். மட்டுமல்லாமல், வசனத்தை மக்களுக்கு எடுத்து கூறும் தைரியத்தை பெறுவார்கள். சாட்சியாய் வாழ முடியும்.

அடுத்தபடியாக அப்–12:5–ல் பேதுரு சிறைச்சாலையிலே காக்கப்பட்டிருக்கையில் சபையார் அவனுக்காக தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார்கள். நடந்த காரியம் என்ன? சபையாருடைய ஜெபத்தை கேட்டு, தேவன் ஒரு தூதனை அனுப்பி தமது ஊழியரை விடுவித்தார். சபையானது போதகருக்காக, ஊழியர்களுக்காக, ஜெபிக்க வேண்டும். அப்பொழுது, கர்த்தர் கேட்டு தமது ஊழியர்களை பாதுகாப்பார்.

மட்டுமல்லாமல், 2 நாளா – 7:14–ல் என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி ஜெபம் பண்ணி என் முகத்தை தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து அவர்கள் தேசத்துக்கு ஷேமத்தை கொடுப்பேன் என்று வாக்குக்கொடுத்திருக்கிறார். ஆகையால் அவருடைய நாமம் தரிக்கப்பட்ட பிள்ளைகளான விசுவாசிகள் ஒன்றுகூடி ஜெபிக்கும் போது தேசத்திற்கு ஷேமம் உண்டாகும்.

கடைசியாக இயேசுவுடன் அவருடைய சீஷர்கள் மூன்றரை வருடம் ஊழியம் செய்யும் பொழுது அநேக அற்புதங்களையும், அடையாளங்களையும் கண்டார்கள். ஆனாலும் கூட, இயேசுவிடம் அற்புதம் அடையாளங்கள் எப்படி நடக்கிறது? எங்களுக்கு கற்றுத்தாரும் என்று கேட்காமல், நாங்கள் எப்படி ஜெபிக்க வேண்டும்? எங்களுக்கு கற்றுத்தாரும் என்றார்கள். காரணம் என்னவென்றால், அவர்கள் இயேசுவிடம் கண்டகாரியம் அவர் எப்பொழுதும் ஜெபித்துக்கொண்டேயிருந்தார். ஜெபத்திற்கு பின்பு அற்புதம், அற்புதத்திற்கு பின்பும் தேவனை மகிமைப்படுத்தி ஜெபித்தார்.

ஆகையால் அவருடைய ஜெபம் தான், அவர் பிதாவோடு கொண்டுள்ள உறவுதான், அற்புத அடையாளங்களை கொண்டு வருகிறது என்பதை சீஷர்கள் நன்கு அறிந்து கொண்டார்கள். இந்நாட்களில், ஊழியக்காரர்களும், விசுவாசிகளும் கூட தங்கள் கைகளினால் அற்புத அடையாளங்கள் நடக்க வேண்டும் என்று வாஞ்சிக்கிறார்கள். ஆனால் ஜெபத்திற்கோ அதிக நேரம் கொடுப்பதில்லை. பிரியமானவர்களே! தேவனுடைய சமூகத்தை எவ்வளவு நாடுகிறோமோ அவ்வளவுக்கதிகமாய் தேவன் நம் மூலமாய் மகிமைப்படுவார்!

இயேசு கெத்சமனேயில் கடைசியாக ஜெபிக்கும் போது தம்முடைய சீஷர்களை பார்த்து, நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடு கூட விழித்திருக்கக் கூடாதா? நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள் என்றார்

***ஜெபிப்போம்! ஜெயத்தை பெறுவோம்! தேசத்தை சுதந்தரிப்போம்!***

## *15.03.2012 அன்று பிறந்த நாள் காணும்*

சகோதரி **வஹிதா தேவதாஸ்** *அவர்களை*

***வாழ்த்துகிறோம்....***



***சகோதரி வஹிதா தேவதாஸ்*** அவர்கள் தாயின் கர்ப்பத்தில் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு பாத்திரம். இவர் ***சகோ. தேவதாஸ்*** அவர்களுக்கு தேவன் தந்த பரம தரிசனப்பணியான பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் நடைபெறும் மிஷனெரிப் பணியிலே ஒரு அப்போஸ்தலப் பணியை நிறைவேற்றுவதிலும், ஆயிரம், ஆயிரம் பீல் ஆதிவாசி குடும்பங்களுக்கும், சுமார் 500 பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்கள் குடும்பங்களுக்கும் ஆவிக்குரிய தாயாக அன்பையும், அரவணைப்பையும், ஆலோசனைகளையும், தேவனுடைய வழிநடத்துதல்களையும், தேவனுடைய வல்லமையையும் அறிவித்து நடத்திச் செல்லுகிற ஒரு அன்பு சகோதரியாவார்.

தேவன் இந்நாட்களில் தம் தீர்க்கதரிசன அபிஷேகத்தை அளவில்லாமல் இவர்கள் மேல் ஊற்றியிருக்கிறார். மார்ச் 15ம் தேதி (15.03.1963) *“பிறந்த நாள்”* காணும் **சகோதரி வஹிதா தேவதாஸ்** அவர்களை அந்நாளில் ஜெபித்து ஆசீர்வதிக்க அன்பாய் கேட்கிறோம். 49 வருடங்கள் கர்த்தரின் நாமத்தின் மகிமைக்காக வாழ்ந்து வருகிறார்கள்.

சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களின் தொலைபேசி எண் : 09376018006

***இந்நாட்களில் அவர்களுடைய சாட்சியை அளிப்பதில்
பெருமகிழ்ச்சியடைகிறோம்....***

## அர்ப்பணித்தேன் என்னையே...

**சகோதரி. வஹிதா தேவதாஸ்**

நான் 15.03.1963 அன்று தூத்துக்குடியைச் சேர்ந்த திரு. அருள்ராஜ் – கிரேஸ் அம்மாள் தம்பதியருக்கு மூத்த மகளாகப் பிறந்தேன். நான் எனது பெற்றோருக்கு மிகவும் பிரியமான மகளாகவும், கிறிஸ்தவ பக்தி, ஒழுக்கங்களில் சரியாக நடத்தப்பட்டும் வளர்க்கப்பட்டேன். நான் சிறு வயதிலிருந்து இயேசு கிறிஸ்துவை அதிகமாய் நேசித்து வந்தேன்.

1976ஆம் ஆண்டு நாகர்கோவிலில் கொட்டாரம் என்ற இடத்தில் நடைபெற்ற வாலிப பெண்கள் முகாமில் தேவன் என்னோடு **“கர்த்தர் என் வெளிச்சமும், என் இரட்சிப்புமானவர், யாருக்கு பயப்படுவேன், கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன்?”** சங். 27:1 என்ற வசனத்தின் மூலம் பேசினார். அந்நேரமே என்னை ஊழியத்திற்கென்று அர்ப்பணித்தேன்.

ஊழியம் செய்யவேண்டுமென்ற வாஞ்சையிருந்த பொழுதிலும் பெற்றோரின் விருப்பப்படியே கல்லூரி படிப்பிற்குச் சென்றேன். எனது சரீரத்தில் இழுப்பு வியாதியினால் கஷ்டப்படுவேன். இந்த வியாதியிலிருந்து விடுதலை கிடைத்தால் ஊழியத்திற்கு அனுப்புவேன் என்று என் தாயார் பொருத்தனையோடு ஜெபித்தார்கள். 2 நாட்கள் மருத்துவமனைக்குச் சென்றேன் எந்த பலனுமில்லை. காயல்பட்டிணத்தில் நடைபெற்ற **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்கள் கூட்டத்தில் தேவன் எனக்கு அற்புதமான சுகத்தைக் கொடுத்தார். எனக்கு ஜீவனைக் கொடுத்த தேவனுக்காக வாழ என்னை அர்ப்பணம் செய்தேன்.

திடீரென்று என் தகப்பனார் வியாதிப்படுக்கையில் விழுந்தபடியால் நான் வேலைக்குப் போகும் சூழ்நிலை ஏற்பட்டது. அதே நேரத்தில் மிஷனெரியாக ஒரிஸா செல்லும்படியாக வாய்ப்பு கிடைத்தது. ஒருபக்கம் உலக வேலை மறு பக்கம் ஊழியம் எதை தெரிந்தெடுப்பது என்று தவித்தேன். எனது பெற்றோர் கண்ணீரோடு என்னை ஊழியத்திற்கென்று அர்ப்பணித்தார்கள். 1983–ல் IMS மூலம் ஒரிஸா மாநிலத்தில் மல்க்கன்கிரி என்ற பணித்தளத்தில் மிஷனெரியாக 2 ஆண்டுகள் பணிபுரிந்தேன்.

நான் எதிர்காலத்திலும் தேவனுக்காக ஊழியம் செய்ய வேண்டும் என்று ஜெபித்து வந்தேன். தேவன் என் ஜெபத்தைக் கேட்டார். 1985ஆம் ஆண்டு ஜுலை 8 ஆம் தேதி FMPB- ல் பீஹாரில் பணியாற்றிக் கொண்டிருந்த சகோ. தேவதாஸ் அவர்களோடு திருமணம் நடந்தது. பீல் ஆதிவாசிகள் மத்தியில் ஊழியம் செய்வதற்கு எங்கள் இருவரையும் தேவன் இணைத்து எங்களை அழைத்தவர் கடந்த 24 வருடங்கள் எங்கள் வாழ்க்கையிலும் பீல் மக்கள் ஊழியப் பாதையிலும் உண்மையுள்ளவராயிருக்கிறார். தேவனுக்கே மகிமையுண்டாவதாக...

---

# `ôúXôm ª `ù]¬ ù_TdáÔûL

| நாள் | நேரம் |
|---|---|
| **10.03.2012,**<br>**சனிக்கிழமை** | **மாலை 5.00 மணி**<br>**முதல் 7.00 மணி வரை** |

*இடம் :* **ஷாலோம் கிளை அலுவலகம்,**
M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்)
வடக்குத் தெரு, மார்த்தாண்டம்

தேவ செய்தி : **சகோ. C. ஜெயசிங் பால்**

ஒய்பு பெற்ற தலைமை ஆசிரியர், மார்த்தாண்டம்

***யாவரும் குடும்பமாய் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக ஜெபிக்கவும்,***
***தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் அன்பாய் அழைக்கிறோம்.***

தொடர்புக்கு

**சகோ. செல்வதுரை,** Cell : 94876-89869,

**சகோ. ஜார்ஜ்,** Cell : 98944-78405 **சகோ. கிங்பேர்ட்,** Cell : 94868-64820




தேவனுக்கே மகிமை!

பிரியமானவர்களே, நமது ஷாலோம் பணித்தளங்களிலுள்ள பீல் ஆதிவாசி சிறுவர்களை தேவன் மிகவும் நேசித்து, தமது கிருபையால் ஆசீர்வதித்து, அவர்களை ஞானத்தினால் நிரப்பி கல்வி அறிவை தந்து வருகிறார். மேலும் அவர்கள் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சராக ஏற்றுக் கொண்டு வேத அறிவிலும் வளர்ந்து வருகின்றனர். இந்த சிறுவர்களை ஸ்திரப்படுத்தும்படியாக ஒவ்வொரு ஞாயிறு அன்றும் நமது ஷாலோம் திருச்சபைகளில் ஞாயிறு வேத பள்ளிகளும், சிறுவர் மற்றும் வாலிபர்களுக்கான சிறப்பு முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும் ஒவ்வொரு ஆண்டும் பள்ளி விடுமுறை நாட்களாகிய மே மாதத்தில் சிறுவர் வேதாமப் பள்ளி (CBC - Children Bible Class) நடத்தப்பட்டு வருகிறது. இந்த பள்ளிகளில் ஆயிரமாயிரம் சிறுவர்கள் பங்கு பெற்று ஆசீர்வாதம் பெற்று வருகின்றனர். கடந்த 2011ஆம் ஆண்டில் **"நல்ல போதகர் இயேசு"** என்ற தலைப்பில் 30000 சிறுவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டனர். இதற்கான தேவைகளை சந்தித்து வரும் பங்காளர்களாகிய உங்கள் யாவருக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

அதே போல் இந்த ஆண்டும் **"எனது அழகான இருதயம்"** என்கிற தலைப்பில் 30000 சிறுவர்களுக்கு 600 கிராமங்களில் CBC நடத்த ஜெபத்துடன் செயல்பட்டு வருகிறோம். இதற்கான தேவைகள் 600 ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கையேடுகள், 30000 CBC புத்தகங்கள், Badge. (30000), பாட்டுப் புத்தகங்கள் (10,000), கலர் பென்சில்கள், பேனாக்கள் (5000 Sets), CBC புத்தகங்கள் நேர்த்தியாக பிரிண்ட் செய்யவும், மற்றபொருட்கள் வழங்கவும் ஒரு குழந்தைக்கு தலா **ரூ. 10/– வீதம் 30000 குழந்தைகளுக்கு ரூ. 3 இலட்சம்** தேவைப்படுகிறது. இந்தத் தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

மேலும் உங்கள் குடும்பத்தின் சார்பிலோ, ஊழியத்தின் சார்பிலோ அல்லது சபையின் சார்பிலோ **ஒரு குழந்தைக்கு ரூ. 10/– வீதம்** உங்களால் முடிந்த அளவிலான குழந்தைகளுக்கு கொடுத்து இந்த சிறுவர் ஊழியத்தைத் தாங்க முன்வாருங்கள்.

**தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தின்**
**பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக!**


CBC பயிற்சி புத்தகங்கள்

**"சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்;"**
மத்தேயு 19:14

## *ஷாலோம் ஜெபக் கூடுகைகள்*

தேவனுடைய பெரிதான கிருபையாலும் இரக்கத்தாலும் நமது ஷாலோம் ஜெபக் கூடுகைகள் நமது ஷாலோம் ஆதரவாளர்களின் இல்லங்களில் நடைபெற்று வருகிறது. இறுதி நாட்களில் தேவனுடைய ராஜ்ஜியம் கட்டப்பட ஜெபம் மிகவும் அவசியம், எனவே தேவனுடைய திட்டத்தின்படி இந்த நாட்களில் ஜெபக்கூடுகைகள் **ஒவ்வொரு மாதமும்** நடைபெற்று வருகின்றன. இந்தக் கூடுகைகளில் தேசத்திற்காக, ஊழியங்களுக்காக, ஊழியர்களுக்காக, குடும்பங்களுக்காக, ஜெபித்து வருகிறோம். தற்பொழுது நடைபெற்றுவரும் ஜெபக் கூடுகைகளின் விபரங்களை கீழே கொடுத்துள்ளோம்.

மேலும் உங்கள் இல்லங்களிலும், உங்கள் பகுதிகளிலும் ஜெபக்கூடுகைகள் நடத்த நீங்கள் விரும்பினால் நமது ஷாலோம் ஊழியர் ஷாலோம் ஊழியர்களைத் தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்கு ஆலோசனைகளையும், ஜெபக்குறிப்புகளையும் வழங்குகிறோம். தொடர்பு கொள்ள வேண்டிய ***தொலைபேசி : 0461 – 2375468, செல் : 9345675468***

### *பிப்ரவரி மாதம் ஜெபக்கூடுகைகள் நடைபெறும் விபரங்கள்*

| தேதி | நாள் | நேரம் | இடம் / தொடர்பு |
|---|---|---|---|
| 02.03.2012 | முதல் வெள்ளி | மாலை 6 மணி | **சகோ. பாஸ்கர்,** ஸ்டேட் பேங்க் காலனி, தூத்துக்குடி – 2. செல் : 99940–25696 |
| 03.03.2012 | முதல் சனி | காலை 9.30 மணி | **Sharing Love Mission** தலைமை அலுவலகம், 5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 8. செல் : 9345675468 |
| 08.03.2012 | 2ம் வியாழன் | மாலை 7 மணி | **சகோதரி. பாத்திமா மேரி,** M.G.R. நகர் (பாலம்) திருச்செந்தூர் ரோடு, தூத்துக்குடி – 8. |
| 17.03.2012 | மூன்றாம் சனி | மாலை 6 மணி | **சகோ. ஜெயக்குமார்,** 2/328, 5 வது தெரு (Extn.) P&T காலனி, தூத்துக்குடி – 8. செல் : 9843379994 |

**"என்னை இழுத்துக்கொள்ளும், உமக்குப் பின்னே ஓடிவருவோம்".** உன்னதப்பாட்டு 1:4

# அந்தர்வேலியா கிராமத்திற்காக ஜெபியுங்கள்....

**கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே,**

தேவ கிருபையாலும், உங்கள் யாவரின் ஜெபங்களினாலும் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் ஊழியங்கள் மிக சிறப்பாக நடைபெற்று வருகின்றன. உங்கள் ஜெபங்கள் மற்றும் ஆதரவிற்காக நன்றி கூறுகிறோம்.

பிரியமானவர்களே, மத்திய பிரதேசத்தில் ஜாபுவா மாவட்டத்தில் அந்தர்வேலியா கிராமத்தை தான் மையாக வைத்து நம் ஷாலோம் ஊழியங்கள் ஆரம்பிக்கப்பட்டன. சுமார் 50 கிராமங்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படவும், 40க்கும் அதிகமான சுதேச ஊழியர்கள் எழும்பவும், பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள் தேவனை அறியவும் இது ஒரு எழுப்புதலின் ஸ்தலமாக அமைந்தது.

2003ஆம் ஆண்டு ஜாபுவா மாவட்டம் முழுவதிலும் கிறிஸ்துவத்திற்கு விரோதமாக எழும்பின பயங்கரமான எதிர்ப்புகள் காரணமாக அந்தர்வேலியாவில் நமது ஜீப் வாகனம் எரிக்கப்பட்டது. ஊழியர்கள் வீடுகள் தீக்கிரையானது. கட்டப்பட்டுக் கொண்டிருந்த ஆலயம் சேதப்படுத்தப்பட்டது. ஊழியர்கள், விசுவாசிகள் துன்புறுத்தப்பட்டனர். அதன் மத்தியிலும் விசுவாசிகள் உறுதியாய் நின்றார்கள்; ஜெபித்தார்கள்; ஜெயம் பெற்றார்கள்.

இன்று தடைகள் நீங்கப்பெற்ற நிலையில், ஆலயம் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டள்ளது. நான்கு திசைகளிலும் நற்செய்தி பரவியது. ஊழியர்கள் பெருகவே, சபைகளும் பெருகி இப்போழுது பெரும் எழுப்புதலை கண்டு வருகிறோம். அது மட்டுமன்றி, Compassion East India ஸ்தாபனத்தின் மூலமாக அந்தர்வேலியா கிராமத்தில் 2009ஆம் ஆண்டு நம் விசுவாசிகளின் பிள்ளைகள் மட்டுமன்றி, மற்ற குடும்பங்களின் பிள்ளைகளுக்கும் சேர்த்து சிறுவர் கல்வி முன்னேற்றப் பணி ஆரம்பிக்கப்பட்டது.

இந்த திட்டத்தின் மூலம் சுமார் 300 ஆதிவாசி பிள்ளைகளுக்கு முழு முன்னேற்ற வாழ்வுக்கான திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தினை நிறைவேற்ற, நம் ஷாலோம் மூலமாக 300 பிள்ளைகள் டியுஷன் படிப்பதற்கென்று உடனடியாக 6 அறைகள் கட்டப்பட வேண்டியது அவசியம். இல்லையெனில் இத்திட்டத்திற்காக ஆதரவு (Sponsorship) கிடைப்பது கடினமாகிவிடும். ஆகவே 60 x 25 அளவில் ஒரு ஹால் விரைவாகக் கட்டப்பட்டு வருகிறது. இதற்காக மதிப்பீடு **சுமார் ரூ. 3,00,000/–** ஆகும்.

நீங்கள் ஷாலோம் ஊழியத்திற்கும், பீல் ஆதிவாசி மக்களுக்கும் ஆசீர்வாதமான பாத்திரங்கள் அந்தர்வேலியா 300 ஆதிவாசி மாணவர்களின் கல்விப் பணிகள் ஆசீர்வதிக்கப்பட மேற்கண்ட அவசரத் தேவை **ரூ. 3 இலட்சங்கள்** சந்திக்கப்பட ஜெபிக்கவும். உங்களால் முடிந்த நிதி உதவியை அனுப்பவும் தயவாக வேண்டுகிறேன். கட்டிடப்பணியை முடித்து பிரதிஷ்டை செய்யப்பட்டவுடன் மகிழ்ச்சியால் நிறைந்திருக்கும் பிள்ளைகளின் புகைப்படங்களையும் வீடியோ கேசட்களையும் அனுப்பி வைக்கிறோம்.

**“சிறுமைப்பட்டவன் மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்; தீங்கு நாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார்.” (சங்கீதம் 41:1)**

# பீல் ஆதிவாசி மாணவர் விடுதி கட்டும் பணி
# அந்தர்வேலியா கிராமம், மத்தியப்பிரதேசம்



சுவிசேஷத்திற்கு செவிசாய்க்கும் பீல் ஆதிவாசி ஜனங்கள் – அக்டோபர் 2003ல்
அந்தர்வேலியாவில் நடைபெற்ற நற்செய்திக் கூட்டத்தில் சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள்



அந்தர்வேலியா கிராமத்தில் டிசம்பர் மாதம் 2003ம் ஆண்டு எதிர்ப்பாளர்களால்
எரிக்கப்பட்ட நமது ஊழிய வாகனம் அர்மதா ஜீப்



எரிக்கப்பட்ட நமது ஊழிய வாகனத்திற்குப் பதிலாக
தேவன் தந்த புதிய வாகனம் – 2004



பழைய அந்தர்வேலியா கிராம ஆலயம் – 2002



புதிய அந்தர்வேலியா கிராம ஆலயம் 2009



அந்தர்வேலியா கிராம ஆதிவாசி மாணவர்களுடன்
சகோ. மோகன் சி. லாரசஸ் அவர்கள் – 2010



ஆதிவாசி மாணவர்களுக்காக தற்போது கட்டப்பட்டு வரும் விடுதி

**பீல் ஆதிவாசி மாணவர்களுக்காகக் கட்டப்படும் விடுதிக்குத் தேவை ரூ. 3,00,000/-**
**தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். உங்கள் பங்கினையும் அனுப்பி உதவுங்கள்!**

## தேர்வெழுதும் பீல் ஆதிவாசி மாணவர்களுக்கான விசேஷித்த ஜெபம்

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இந்த ஆண்டு 10ம் மற்றும் 12ம் வகுப்பு அரசு தேர்வு எழுதும் பீல் ஆதிவாசி மாணவர்களுக்கென்று சிறப்புப் பிரார்த்தனைக் கூட்டம் குஜராத், தாகோத்தில் வைத்து கடந்த பிப்ரவரி 5ம் தேதி நடைபெற்றது. இந்தக் கூடுகையில் சுமார் 115 மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.

துதி ஆராதனையில் மாணவர்கள் உற்சாகமாக நடனத்துடன் பாடல்கள் பாடி தேவனை மகிமைப்படுத்தினர். நமது பேராயர் **வே. தேவதாஸ்** அவர்கள் மாணவர்களுக்கென்று விசேஷித்த செய்தியை வழங்கினார்கள். அதன்பின் **சகோதரி வஹிதா தேவதாஸ்** அவர்கள் மாணவர்கள் எவ்வாறு தேர்வு எழுதலாம் என்பது குறித்து ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகள் வழங்கினார்கள்.

அதன்பின் பேராயர் மற்றும் சகோதரி வஹிதா தேவதாஸ் இருவரும் ஒவ்வொரு மாணவ, மாணவியருக்கும் தனித்தனியாக ஜெபித்து, ஆசீர்வதித்து பேனாக்கள் அன்பளிப்பாக வழங்கினார்கள். அனைத்து மாணவர்களும் தேர்வில் நிச்சயம் நல்ல மதிப்பெண்களோடு வெற்றிபெறுவோம் என்ற விசுவாசத்துடன் திரும்பிச் சென்றுள்ளனர். மாணவச் செல்வங்களின் நல்ல ஆரோக்கியத்திற்காகவும், தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெற்று சமுதாயத்தில் முன்னேறவும் மறவாமல் ஜெபியுங்கள்.

## ª ` ù ] ¬ ©W§ v ûP BWôRû ]

ஆண்டவருடைய பெரிதான கிருபையினால் **15.02.2012** அன்று தூத்துக்குடி பெரியநாயகபுரத்திலுள்ள இம்மானுவேல் சி.எஸ்.ஐ ஆலயத்தில் வைத்து நம் ஷாலோம் ஊழியர் **சகோ. அஜ்மீர் டாமோர்** அவர்களை பிரதிஷ்டை செய்தோம். பாலியர் நண்பன் குருவானவர் **Rev.** ஜெபராஜ் அவர்கள் இந்த ஊழியரை பிரதிஸ்டை செய்தார்கள். **சகோ. அஜ்மீர் டாமோர்** அவர்கள் தன்னுடைய மொழியில் சாட்சி கூற, **சகோ.சாம் குணசீலன்** அவர்கள் மொழிமாற்றம் செய்தார்கள். மேலும் ஊழியர் பீலி மொழியில் ஒரு பாடலையும் பாடி தேவனை மகிமைப்படுத்தினார். சுதேச ஊழியரை உற்சாகமாக தாங்க முன் வந்த தூய இம்மானுவேல் சி.எஸ்.ஐ ஆலய சபை மக்களுக்கும் சபை போதகர் Rev. **ஆபிரகாம் பீட்டர்** அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## **COMPASSION PROJECT** ( ¶ úWôXô) UôQ YoL ° u Lp®f Ñt ßXô

நமது ஷாலோம் இயக்கமும், Compassion Bal Vikas-ம் இணைந்து நடத்தும் ஹிரோலா Project சிறுவர்கள் 78 பேர் குஜராத் கேடா மாவட்டத்தில் உள்ள கடானா மஹி சாகர் என்ற இடத்திற்கு சுற்றுலா சென்று திரும்பினர்.

இந்த கடானா மஹி சாகரில் தண்ணீர் மூலமாக மின்சாரம் தயாரிப்பதைப் கண்டு நமது ஆதிவாசி சிறுவர்கள் மகிழ்ந்தனர். மேலும் இதைப் போன்று பெரிய பெரிய இடங்களில் பெறியியல் வல்லுநர்களாகவும், அதிகாரிகளாகவும் வர வேண்டும் என்று நமது பீல் சிறுவர்களுக்குள்ளும் ஆர்வங்கள் கூடின. தேவன் தாமே இவர்களுடைய ஆர்வங்களையும், ஆசைகளையும் நிறைவேற்றுவாராக! இவர்களுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள்!

## தேர்வெழுதும் பீல் மாணவர்களுக்கான சிறப்பு ஜெபம் - 05.02.2012



மாணவர்களுக்கு சிறப்பு செய்தியும் ஆலோசனைகளும் வழங்கும் பிஷப் தேவதாஸ் அவர்கள்



மாணவர்களை ஜெபித்து ஆசீர்வதிக்கும் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள்



மாணவர்களுக்கு அளிக்கப்பட்ட அன்பளிப்புகளுக்கான ஜெபம்



கலந்து கொண்ட பீல் ஆதிவாசி மாணவர்கள்

## B.Th., தேர்வெழுதும் நமது பீல் சுதேச ஊழியர்கள் - 21 - 27.01.2012





தேவனுக்கே மகிமை உண்டாவதாக! Allahabad Bible Seminary –ல் தொலை தூரக் கல்வி மூலம் நமது ஷாலோம் சுதேச ஊழியர்கள் 70க்கும் அதிகமானோர் B.Th., முடித்து பட்டம் பெற்று, அபிஷேகிக்கப்பட்டு ஊழியம் செய்து வருகிறார்கள். அதே போன்று தற்போது 15 ஊழியர்கள் B.Th., பயின்று வருகின்றனர். அவர்களுக்கென்று இந்தக் கல்வி ஆண்டிற்குரிய தேர்வு தாகோத்தில் கடந்த ஜனவரி மாதம் 21ம் தேதி முதல் 27ம் தேதி வரை நடைபெற்று வருகிறது. இதில் நமது ஊழியர்கள் சிறப்பாக தேர்வு எழுதினார்கள். இவர்கள் B.Th., முடித்து பட்டம் பெற்று ஊழியத்தில் வல்லமையாக செயலாற்ற தொடர்ந்து ஜெபியுங்கள்.

## ம.பி. படுவானி மாவட்டத்தில் நடைபெற்ற நற்செய்திக்கூட்டம் - 30.01.2012



சுவிசேஷத்தைக் கேட்கும்படியாகக் கூடியிருந்த பீல் ஆதிவாசி ஜனங்கள்



சுவிசேஷ செய்தியளிக்கும் சகோ. ஜெயராஜ் அவர்கள்

## மூப்பர்களுக்கான சிறப்புக் கூடுகை - ம.பி. - 26&27.01.2012



கூடியிருந்த மூப்பர்கள்



சிறப்புச் செய்தி : பிஷப் தேவதாஸ் அவர்கள்



ஆராதனை : சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள்



மூப்பர்களை ஆசீர்வதித்து ஜெபம்

## குஜராத் முதல்வர் திரு. நரேந்திர மோடி அவர்களுடன் நமது பிஷப் தேவதாஸ் அவர்கள் சந்திப்பு – 04.02.2012







## சுதேச ஊழியர் பிரதிஷ்டை ஆராதனை – 12.02.2012




பிரதிஷ்டை செய்யப்படும் சகோ. அஜ்மீர் சிங்




சபை போதகர் மற்றும் அங்கத்தனர்களுடன்

## Compasstion Project (ஹிரோலா) மாணவர்களின் கல்விச் சுற்றுலா – 27.01.2012



கடானா அணையில் நமது ஆதிவாசி சிறுவர்கள்



படகு சவாரியின் போது





பூங்காவினில் நமது சிறுவர்கள்

## தேர்வெழுதும் மாணவர்களுக்கான சிறப்புக் கூடுகை – 11.02.2012 (மார்த்தாண்டம்)



மாணவர்கள் மற்றும் பெற்றோருக்கு ஆலோசனை
மற்றும் சிறப்புச் செய்தி : Prof. C.S. கிறிஸ்டோபர் அவர்கள்



கூடியிருந்த மாணவர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்

# ஷாலோம் செயற்குழுக் கூட்டம் - 13.02.2012



ஆராதனை வேளை – சகோதரி வஹிதா தேவதாஸ்



ஊழியப் பகிர்வு – பிஷப் தேவதாஸ்



ஆரம்ப ஜெபம் & ஆலோசனைகள் – சகோ. வின்ஸ்டன் பாலசிங்



வரவேற்புரை – Prof.C.S. கிறிஸ்டோபர்



முன்னேற்றப்பணி குறித்து ஆலோசனை – சகோ. சுதந்திரசிங்



விசேஷித்த ஜெபம் – சகோ. ஜார்ஜ்



Accounts குறித்து ஆலோசனை – சகோ. பிரேம்குமார்



வருகை தந்திருந்த செயற்குழு உறுப்பினர்கள்

# SHARING LOVE MISSION - BOARD MEETING

# அன்பு பகிர்வு இயக்கம் - செயற்குழு கூட்டம்

தேவனுடைய பெரிதான கிருபையினால் 13.02.2012 திங்கட்கிழமையன்று ஷாலோம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்தில் வைத்து ஷாலோம் செயற்குழு கூட்டம் மிக சிறப்பாக நடைபெற்றது. இக் கூட்டத்தில் உறுப்பினர்கள் :

| | |
|---|---|
| **சகோ. V. தேவதாஸ்** | |
| **சகோதரி. வஹிதா தேவதாஸ்** | |
| **பேராசிரியர். C.S. கிறிஸ்டோபர்,** | பாளையங்கோட்டை. |
| **சகோ. P. ஜார்ஜ்,** | பாகோடு |
| **சகோ. சுந்தர்ராஜ்,** | பயணம். |
| **சகோ. J. அற்புதராஜ் மர்காஷிஸ்,** | தூத்துக்குடி. |
| **சகோ. சுதந்திரசிங்,** | சென்னை. |
| **சகோ. ரோஷன்,** | தூத்துக்குடி. |
| **சகோ. ஜான் விக்டர்,** | கோவை. |
| **டாக்டர். பிரேமா கிறிஸ்டோபர்,** | பாளையங்கோட்டை. |
| **சகோ. வின்ஸ்டன் பாலசிங்,** | தூத்துக்குடி. |
| **சகோ. ஜெல் ஜோசப்,** | தூத்துக்குடி. |
| **சகோ. பிரேம் குமார்,** | தூத்துக்குடி. |

ஆகியோர் பங்கு பெற்றனர். இக்கூட்டம் காலை 11.00 மணிக்கு ஆரம்பித்து மாலை 4.00 மணி வரை நடைபெற்றது. கூட்டத்தை **பேரா. கிறிஸ்டோபர்** அவர்கள் நிகழ்ச்சிகளை நடத்திக் கொடுத்தார்கள் **திரு. விக்டர்** ஜெபித்து ஆரம்பித்தார்கள். **சகோதரி வஹிதா தேவதாஸ்** அவர்கள் கடந்த 2011ஆம் ஆண்டில் ஊழியத்தில் தேவன் செய்த காரியங்களை மிகவும் தெளிவாகக் கூறினார்கள். அதைக் கேட்ட எல்லா உறுப்பினர்களும் தேவனைத் துதித்து ஆத்தும பாரத்தையும், தரிசனங்களையும் பெற்றுக் கொண்டார்கள். ஸ்தோத்திர ஜெபத்தை **சகோ. ஜார்ஜ்** அவர்கள் கண்ணீரோடு ஆண்டவரை துதித்து ஏறெடுத்தார்கள்.

அதன்பின் **சகோ. தேவதாஸ்** அவர்கள் 2012 ஆம் ஆண்டின் திட்டங்களையும் தேவைகளையும் பகிர்ந்து கொண்டார்கள். ஊழியத்தின் காரியங்களுக்காக பல தீர்மானங்கள் உறுப்பினர்களின் ஆலோசனையின்படி நிறைவேற்றப்பட்டது. **பிஷப் தேவதாஸ்** அவர்கள் தேவ செய்தியை பகிர்ந்து கொண்டார்கள். அனைத்து உறுப்பினர்களும் அநேக ஆலோசனைகளை கொடுத்தார்கள். **சகோ. பிரேம் குமார்** அவர்கள் Accounts பற்றி பகிர்ந்து கொண்டார்கள். **சகோ. சுதந்திரசிங்** அவர்கள் ஊழிய முன்னேற்றப்பணிகளை குறித்து ஆலோசனைகளை கொடுத்தார்கள். அதே நாளில் ஷாலோம் சேரிட்டி மிஷன் செயற்குழு கூட்டமும் நடைபெற்றது. இறுதியாக **பேரா. கிறிஸ்டோபர்** அவர்கள் ஜெபித்து கூட்டத்தினை நிறைவு செய்தார்கள்.

# ê lToLÞdLô ] £\ l×d áÓûL - Uj§Vl©WúRNm

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் கடந்த மாதம் மத்தியப்பிரதேசம் மாநிலத்திலுள்ள ஷாலோம் திருச்சபைகளிலுள்ள மூப்பர்களுக்கான சிறப்புக் கூடுகைகள் நடைபெற்றன. இதில் அலிராஜ்பூர் மாவட்டத்திலுள்ள சபைகளின் மூப்பர்கள் கூடுகை ஜோபட் என்ற இடத்திலுள்ள C.N.I ஹாலில் வைத்து 26.01.2012அன்றும், ஜாபுவா மாவட்டத்திலுள்ள சபைகளின் மூப்பர்கள் கூடுகை நவகாம் என்ற கிராமத்திலுள்ள நமது ஷாலோம் சபையில் வைத்து 27ம் தேதியும் நடைபெற்றது.

இந்தக் கூடுகைகளில் 450க்கும் அதிகமான மூப்பர்கள் பங்கு பெற்றனர். சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் ஆராதனைகளை நடத்தினார்கள். அனைத்து மூப்பர்களும் உற்சாகத்துடன் நடனமாடி தேவனைத் துதித்து பயபக்தியோடு ஆராதனை செய்தார்கள். பேராயர் தேவதாஸ் அவர்கள் வாக்குத்தத்த செய்தியளித்து, அனைத்து மூப்பர்களுக்கும் விசேஷித்த ஆசீர்வாத ஜெபத்தினை ஏறெடுத்தார்கள். கூட்டங்களின் முடிவில் அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது. தேவனுக்கே மகிமை!

## ***பணித்தளத்தில் நடைபெற்ற நற்செய்திக் கூட்டம்***

மத்தியப்பிரதேசம் மாநிலத்தில் அமைந்துள்ள படுவானி என்ற கிராமம் ஜாபுவா மாவட்டத்திலிருந்து 200 கி.மீ. தொலைவில் உள்ளது. இந்தப் பகுதியிலும் ஆதிவாசி மக்கள் திரளாய் வாழ்ந்து வருகின்றனர். இந்தப் பகுதிகளில் நமது ஷாலோம் ஊழியர்கள் ஆறு பேர் ஊழியம் செய்து வருகின்றனர். இவர்கள் இணைந்து அந்தப் பகுதியில் ஜனவரி 30ம் தேதி நற்செய்திக் கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்திருந்தனர். இந்தக் கூட்டத்தில் **சகோதரி வஹிதா தேவதாஸ்** அவர்களும் **சகோ. ஜெயராஜ்** அவர்களும் பங்கு பெற்றனர்.

இந்தக் கூட்டத்திற்கு 400க்கும் அதிகமான பீல் ஆதிவாசி ஜனங்கள் வருகை தந்தனர். சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் ஆராதனை நடத்தினார்கள். ஆராதனை வேளையில் தேவ பிரசன்னம் வந்திருந்த அனைவரையும் நிரப்பியது. சகோ. ஜெயராஜ் அவர்கள் தேவ செய்தியளித்தார்கள். பங்கு பெற்ற அனைவருக்கும் விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. கூட்ட முடிவில் அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது. இக்கூட்டத்திற்கு பிறகு சபைகளில் ஆத்துமாக்கள் அதிகரித்து வருகிறார்கள் என்று ஊழியர்கள் சாட்சி கூறுகிறார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! இந்தப் பகுதியில் அநேக ஆத்துமாக்களையும், சபைகளையும் தேவன் தரும்படியாக ஜெபியுங்கள்!

---

***"சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும்***
***ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு...."***

*2தீமோ. 4:2*

# தமிழகத்தில் நடைபெற்ற ஊழியங்களுக்காக தேவனைத் துதியுங்கள்...

**St. மிகாவேல் C.S.I. ஆலய ஞாயிறு ஆராதனை – கோரம்பள்ளம்**

கடந்த **22.01.2012** அன்று காலை கோரம்பள்ளம் St. மிகாவேல் C.S.I. ஆலய ஞாயிறு ஆராதனையில் நமது ஷாலோம் ஊழியர்கள் பங்கு பெற்று துதி ஆராதனை நடத்தும்படியாக தேவன் கிருபை செய்தார். இதில் **சகோ. ரதீஸ்** அவர்கள் பாடல் வேளையை நடத்தினார்கள். **சகோ. ஆலன்** அவர்கள் ஆராதனை வேளையை நடத்தி தேவ செய்தியளித்தார்கள். **சகோ. சாம் குணசீலன்** அவர்கள் ஷாலோம் ஊழியங்களைக் குறித்து பகிர்ந்து கொண்டார்கள். தேவ நாமம் மகிமைப்பட்டது. இந்த வாய்ப்பினை வழங்கிய திருச்சபை போதகர் Rev. **ஆபிரகாம் பீட்டர்** அவர்களுக்காகவும், திருச்சபை மக்களுக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

**பரி. அந்திரேயா ஆலய ஞாயிறு ஆராதனை – கூட்டாம்புளி**

கடந்த **29.01.2012** அன்று காலை கூட்டாம்புளி அந்திரேயா C.S.I. ஆலய ஞாயிறு ஆராதனையில் நமது ஷாலோம் ஊழியர்கள் பங்கு பெற்று துதி ஆராதனை நடத்தும்படியாக தேவன் கிருபை செய்தார். இதில் **சகோ. ரதீஸ்** அவர்கள் பாடல் வேளை மற்றும் ஆராதனை வேளையை நடத்தி தேவ செய்தியளித்தார்கள். **சகோ. ஜான்சன் ஜெபராஜ்** அவர்கள் ஷாலோம் ஊழியங்களைக் குறித்து பகிர்ந்து கொண்டார்கள். தேவ நாமம் மகிமைப்பட்டது. இந்த வாய்ப்பினை வழங்கிய திருச்சபை போதகர் Rev. **எட்வின் ஜெபராஜ்** (சபை குரு), மற்றும் சபை ஊழியர் **சகோ. அதிசயராஜ் அப்பாத்துரை** அவர்களுக்காகவும், திருச்சபை மக்களுக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

**அற்புதர் இயேசு ஆலய ஞாயிறு ஆராதனை – தாளமுத்துநகர்**

கடந்த **29.01.2012** அன்று காலை தாளமுத்து நகர், அழகுமுத்துநகர், அற்புதர் இயேசு ஆலய ஞாயிறு ஆராதனையில் நமது ஷாலோம் ஊழியர்கள் பங்கு பெற்று துதி ஆராதனை நடத்தும்படியாக தேவன் கிருபை செய்தார். இதில் **சகோ. டேவிட்** அவர்கள் தேவ செய்தியளித்தார்கள். **சகோ. ஜெயபிரகாஷ்** அவர்கள் ஷாலோம் ஊழியங்களைக் குறித்து பகிர்ந்து கொண்டார்கள். தேவ நாமம் மகிமைப்பட்டது. இந்தத் திருச்சபைக்காகவும் திருச்சபை போதகர் **Pr. ஜேசு நசரேன்** அவர்களுக்காகவும் திருச்சபை மக்களுக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

**வீட்டு ஜெபக்கூடுகை – புதுக்கோட்டை**

**புதுக்கோட்டை வட்டார ஜெபக்குழு** மூலமாக **05.02.2012** அன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வீட்டு ஜெபக்கூட்டத்தில் நமது ஷாலோம் ஊழியர்கள் **சகோ. சாம் குணசீலன்** அவர்கள் ஆராதனை நடத்தி ஷாலோம் ஊழியங்களைக் குறித்து பகிர்ந்து கொண்டார்.

**சகோ. ஆலன்** அவர்கள் தேவ செய்தியளித்தார்கள். கூட்டத்தினை ஒழுங்கு செய்திருந்து புதுக்கோட்டை வட்டார ஜெபக்குழுவிற்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

**H.M.S. மீட்பர் ஆலய ஞாயிறு ஆராதனை – மேல்பாளை, (மார்த்தாண்டம்)**

கடந்த **12.02.2012** அன்று காலை மேல்பாளை (மார்த்தாண்டம்) H.M.S. மீட்பர் ஆலய ஞாயிறு ஆராதனையில் நமது ஷாலோம் ஊழியர்கள் பங்கு பெறும்படியாக தேவன் கிருபை செய்தார். இதில் **சகோ. ஆலன்** அவர்கள் தேவ செய்தியளித்தார்கள். **சகோ. செல்வதுரை** அவர்கள் ஷாலோம் ஊழியங்களைக் குறித்து பகிர்ந்து கொண்டார்கள். தேவ நாமம் மகிமைப்பட்டது. இந்த வாய்ப்பினை வழங்கிய திருச்சபை போதகர் Rev. **வெஸ்லி** அவர்களுக்காகவும், திருச்சபை மக்களுக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

**I.P.C. சபை ஞாயிறு ஆராதனை – பறகுன்று, (மார்த்தாண்டம்)**

கடந்த **12.02.2012** அன்று காலை பறகுன்று (மார்த்தாண்டம்) I.P.C. சபை ஞாயிறு ஆராதனையில் நமது ஷாலோம் ஊழியர்கள் பங்கு பெற தேவன் கிருபை செய்தார். இதில் **சகோ. ரதீஸ்** அவர்கள் தேவ செய்தியளித்தார்கள். **சகோ. ஜெயபிரகாஷ்** அவர்கள் ஷாலோம் ஊழியங்களைக் குறித்து பகிர்ந்து கொண்டார்கள். தேவ நாமம் மகிமைப்பட்டது. இந்த வாய்ப்பினை வழங்கிய திருச்சபை போதகர் Pr. **அல்பர்ட் சிங்** அவர்களுக்காகவும், திருச்சபை மக்களுக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

**அரசுத் தேர்வெழுதும் மாணவர்களுக்கான சிறப்புப் பிரார்த்தனை – மார்த்தாண்டம்**

கடந்த **11.02.2012** அன்று மாலை ஷாலோம் ஊழியத்தின் சார்பில் மார்த்தாண்டம் ஷாலோம் கிளை அலுவலகத்தில் வைத்து அரசுத் தேர்வெழுதும் மாணவர்களுக்கான சிறப்பு பிரார்த்தனைக் கூட்டம் நடத்தப்பட்டது. இதில் பாளையங்கோட்டையைச் சேர்ந்த **Prof. C.S. கிறிஸ்டோபர்** அவர்கள் மாணவர்களுக்கும், பெற்றோருக்கும் தேவ செய்தியளித்து சிறப்பு ஆலோசனைகளை வழங்கினார்கள். காருண்யா பல்கலைக் கழக மாணவர்கள் தங்கள் சாட்சிகளைப் பகிர்ந்து கொண்டார்கள்.

## *உங்களுக்கு உதவ எங்களுக்கு உதவுங்கள்...*

### *அன்பான ஆதரவாளர்களே,*

உங்களது முகவரியில் மாற்றங்களோ அல்லது திருத்தங்களோ இருந்தால், மேலும் உங்களது முகவரி மாறும்போதோ நீங்கள் தவறாது எங்களுடன் தொடர்புகொண்டு எங்களிடம் அவற்றை உடனடியாக தெரிவிக்க அன்பாய்க் கேட்கிறோம்.

இது நாங்கள் உங்களுடன் சரியாக தொடர்பு கொள்ளவும், நாங்கள் அனுப்பும் கடிதங்கள், பத்திரிகைகள், ஊழிய அறிக்கைகள், ரசீது, தபால்கள் சரியாக உங்களுக்குக் கிடைக்கவும் உதவும். மேலும் உங்களது தொலைபேசி மற்றும் மொபைல் எண்களை எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

# ஜெபிக்க வேண்டுகிறோம்...



✞ குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் சுமார் 1 கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி மக்கள் வாழ்கின்றனர், அவர்கள் அனைவரும் இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

✞ பீல் மக்கள் வாழும் அனைத்து கிராமங்களிலும் குடி, திருட்டு, விபச்சாரம், சண்டை போன்ற பழக்கவழக்கங்களுக்கு அடிமைப்பட்டுள்ள ஜனங்கள் அனைவரும் விடுதலை பெற ஜெபியுங்கள்.

✞ பீல் மக்கள் வாழும் ஒவ்வொரு கிராமத்திலும் சாத்தான், மந்திரக் கிரியைகள், மற்றும் பில்லி சூனியம் போன்ற கட்டுகளால் கட்டப்பட்டுள்ள ஜனங்கள் அனைவரும் விடுதலை பெற ஜெபியுங்கள்.

✞ பீல் மக்கள் வாழும் ஒவ்வொரு கிராமத்திலும் மின்சாரம், குடிநீர், சாலை, பள்ளி, மருத்துவமனை போன்ற அடிப்படை வசதிகளை அரசாங்கம் செய்து கொடுக்க ஜெபியுங்கள்.

✞ பீல் மக்கள் வாழும் அனைத்து கிராமங்களில் நல்ல மழை பெய்யவும், பீல் மக்கள் நிலங்களில் உள்ள சாபங்கள் நீங்கி நல்ல விளைச்சல் உண்டாகவும் ஜெபியுங்கள்.

✞ பீல் மக்கள் வாழும் கிராமங்களில் உள்ள அனைத்து ஜனங்களும் ஒருவரையொருவர் நேசித்து அன்புடன் சண்டை, தகராறு இல்லாமல் வாழ ஜெபியுங்கள்.

✞ குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் சுவிசேஷம் அறிவிக்கப்படாத அநேக கிராமங்கள் உண்டு, சுவிசேஷம் அறிவிக்கப்படாத அனைத்து கிராமங்களிலும் சுவிசேஷம் அறிவிக்கப்படவும், அனைத்துக் கிராமங்களிலும் ஊழியர்கள் எழும்பவும், ஒவ்வொரு கிராமங்களிலும் சபைகள் கட்டப்படவும் ஜெபியுங்கள்.

✞ 2015ஆம் ஆண்டிற்குள் புதிதாக 1000 சுதேச ஊழியர்களும், புதிதாக 1000 சபைகளும் உருவாகும்படியாகவும், ஆலயங்கள் கட்டப்படாத கிராமங்களில் ஆலயம் கட்டப்படவும் ஜெபியுங்கள்.

✞ ஷாலோம் சபைகளும், சபைகளிலுள்ள விசுவாசிகளும் விசுவாசிகளின் குடும்பங்களும், ஊழியர்களும், ஊழியர்களின் குடும்பங்களும் ஆசீர்வதிக்கப்படும்படியாக ஜெபியுங்கள்.

✞ சபைகள் பெருகவும், சபைகளில் புதிய, புதிய ஆத்துமாக்கள் சேர்க்கப்படவும் ஜெபியுங்கள்.

✞ சாத்தானின் பிடியில் இருக்கும் மக்களும், வியாதியஸ்தர்களும் சபைகளுக்கு வரும்போது தேவன் அவர்களுக்கு அற்புதங்கள் செய்து விடுதலையும், நல்ல சுகத்தையும் கொடுக்கும்படியாக ஜெபியுங்கள்.

✞ தேவன் ஏற்படுத்திக் கொடுத்த நம் ஷாலோம் திருமண்டலத்திற்காகவும் அனைத்து சபை ஒருங்கிணைப்புகளுக்காகவும் ஜெபியங்கள்.

- ✞ சபைகளில் பரிசுத்த ஆவியானவரின் நிறைவு காணப்படவும், சபைக்கு வருகின்ற அனைவரும் பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொள்ளவும் ஜெபியுங்கள்.
- ✞ சபைகளிலுள்ள விசுவாசிகள் விசுவாசத்தில் தளர்ந்துவிடாமலிருக்கவும், மீண்டும் பாவ பழக்கவழக்கங்களில் விழுந்து விடாமலிருக்கவும் ஜெபியுங்கள்.
- ✞ சபைகளில் விசுவாசிகள் சாட்சியுள்ள வாழ்க்கை வாழும்படியாகவும், அவர்களுடை வாழ்க்கையைப் பார்க்கின்ற அநேக புறஜாதியார் இயேசுவண்டை வரவும் ஜெபியுங்கள்.
- ✞ சபைகளிலுள்ள மூப்பர்கள் அனைவரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, ஊழியத்தில் ஊழியர்களுடன் இணைந்து ஊழியம் செய்ய ஜெபியுங்கள்.
- ✞ ஒவ்வொரு சபையிலும் 100க்கும் அதிகமான குடும்பங்கள் ஆராதனையில் பங்குபெற ஜெபியுங்கள்.
- ✞ ஒவ்வொரு சபையிலுள்ள விசுவாசிகள், மூப்பர்கள் அனைரும் அனைத்து ஞாயிறு ஆராதனை மற்றும் இதர கூட்டங்களிலும் கலந்து கொள்ளவும், இதன் மூலம் தேவன் அவர்களுடைய வாழ்க்கையை ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.
- ✞ சபைகளில் நடைபெறும் பெண்கள் ஊழியங்களில் ஊழியக்காரிகள் அனைவரும் நன்கு ஊழியத்தில் ஈடுபடவும், இதன் மூலம் பெண்கள் மத்தியில் ஒரு பெரிய எழுப்புதலை தேவன் கட்டளையிடவும் ஜெபியுங்கள்.
- ✞ சபைகளில் நடைபெறும் சிறுவர் ஊழியங்களுக்காகவும், சிறுவர்கள் அனைவரும் இரட்சிக்கப்படவும், அனைத்து சிறுவர்களும் வேத அறிவில் வளரவும் ஜெபியுங்கள்.
- ✞ சபைகளிலுள்ள அனைத்து வாலிபர்களுக்காகவும், அவர்கள் சபையின் தூணாக மாறவும், அவர்கள் மத்தியில் ஒரு பெரிய எழுப்புதல் உண்டாகவும், வாலிபர்களின் படிப்பு, தொழில், வேலைவாய்ப்பு மற்றும் எதிர்காலம் போன்றவற்றிற்காகவும் ஜெபியுங்கள்.
- ✞ சபையிலுள்ள சிறுவர்கள் மற்றும் வாலிபர்களின் கல்வியறிவுக்காகவும், எதிர்காலத்தில் அவர்கள் மருத்துவர், வக்கீல், இஞ்ஜினியர், ஆசிரியர், கலெக்டர், வங்கி அதிகாரி, காவல் துறை, போன்ற பதவிகளில் இருக்கும்படியாக ஜெபியுங்கள்.
- ✞ குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் விடுதிகளில் தங்கிப் படிக்கும் ஊழியர்களின் பிள்ளைகளுக்காகவும், விசுவாசிகளின் பிள்ளைகளுக்காகவும், அவர்களுக்கு தேவன் தேவையான ஞானத்தைத் தரும்படியாகவும் ஜெபியுங்கள்.
- ✞ ஊழியர்கள், விசுவாசிகள், மூப்பர்கள் வாகனங்களில் பிரயாணம் செய்யும்போது தேவனுடைய முழுமையான பாதுகாவல் அவர்களுடன் எப்போதும் இருக்கும்படியாகவும், எந்தவித விபத்துக்கள் நேராதபடியும் ஜெபியுங்கள்.
- ✞ பிஷப். தேவதாஸ், சகோதரி தேவதாஸ் அவர்களுக்காகவும், அவர்களின் பிள்ளைகள் டைட்டஸ், ஷாலோம், ஷெக்கினா ஆகியோருக்காகவும்... குஜராத் தாகோத் பணித்தள அலுவலகத்தில் பணிபுரியும் தேவ பிள்ளைகளுக்காகவும்... தூத்துக்குடி தலைமை அலுவலகத்தில் பணிபுரியும் அனைத்து தேவ பிள்ளைகளுக்காகவும் ஜெபியுங்கள்.

- ✞ குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் நிலம் வாங்கி Training Centre கட்டப்படவும், ஷாலோம் பள்ளி மற்றும் ஹாஸ்டல்கள் கட்டப்படவும் ஜெபியுங்கள்.
- ✞ ஷாலோம் ஊழியத்தின் தேவைகள் அனைத்தையும் தேவன் சந்திக்கவும், ஊழியத்தைத் தாங்கிவரும் ஒவ்வொரு பங்காளர்களும் அவர்களுடைய குடும்பங்களும் ஆசீர்வதிக்கப்படவும் ஜெபியுங்கள்.
- ✞ நமது பணித்தளங்களில் மே மாதம் சிறுவர்களுக்கான CBC (Children Bible Class) நடத்த ஆயத்தமாகி வருகிறோம், இதற்காக ஜெபியுங்கள்
- ✞ பணித்தளங்களில் நடைபெற்று வரும் ஆலய கட்டுமானப் பணிகள் தடையின்றி நடைபெற ஜெபியுங்கள்.
- ✞ நம் ஷாலோம் ஊழியங்களை ஜெபத்தினாலும் பொருளுதவியினாலும் தாங்கி வருகிற நமது ஆதரவாளர்கள் குடும்பங்களுக்காகவும் சபைகளுக்காகவும் ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.
- ✞ நம் ஷாலோம் ஊழியத்தின் Board Members மற்றும் தன்னார்வத் தொண்டர்கள், பிரதிநிதிகளுக்காக ஜெபியுங்கள்.
- ✞ **டாக்டர் பால் தினகரன்** மற்றும் **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்களின் ஊழியங்களுக்காகவும், குடும்பங்களுக்காகவும், தேவன் அவர்களை இன்னும் வல்லமையாக பயன்படுத்தும்படியாகவும் ஜெபியுங்கள்.
- ✞ சென்னையில் விரைவில் கிளை அலுவலகம் ஆரம்பிக்கவும் சென்னை பகுதியில் தேவன் நமக்கு அநேக ஆதரவாளர்களை தரவும் ஜெபியுங்கள்
- ✞ பணித்தள அலுவலகத்தில் ஊழியம் செய்ய ஊழியர்களை தேவன் தரவும் ஜெபியுங்கள்.
- ✞ தூத்துக்குடி அலுவலகத்தில் தன்னார்வமாக செயல்படுகிற சகோ.அற்புதராஜ் மார்காஷியஸ் (கடித தொடர்பு) சகோ.பிரேம் குமார் (Accounts) மற்றும் அனைத்து ஊழியர்களுக்காகவும் ஜெபிங்கள்.
- ✞ வளர்ந்து வரும் நம் ஷாலோம் ஊழியத்தின் திரளான தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.
- ✞ நமது தேசத்தில் ஆட்சி செய்யும் பிரதமர், முதலமைச்சர்கள், கலெக்டர், தாசில்தார், பஞ்சாயத்து தலைவர் மற்றும் அனைத்து அதிகாரிகளும் நீதியோடு ஆட்சி செய்யவும், மக்கள் அமைதியாக வாழவும் ஜெபியுங்கள்.
- ✞ இந்திய தேசத்தில் உள்ள அனைத்து மிஷனெரி ஊழிய ஸ்தாபனங்களுக்காகவும் சபைகளுக்காகவும் சுவிசேஷ ஊழியங்களுக்காகவும் மற்ற ஊழியங்களுக்காவும் ஜெபியுங்கள்.

**மார்ச் மாத ஊழியங்களுக்காக ஜெபியங்கள்**

- ✞ 3 மாநிலங்களில் நடைபெறும் ஊழியர்கள் கூடுகைக்காக ஜெபியுங்கள்.
- ✞ சபை மூப்பர்கள் முகாமில் அநேக மூப்பர்களை தேவன் தம் வல்லமையினாலும் அபிஷேகத்தினாலும் தரிசனத்தினாலும் நிரப்ப ஜெபியுங்கள்.

- ஞாயிறு பள்ளி ஆசிரியர்கள் பயிற்சி மற்றும் சிறு பிள்ளைகள் முகாமிற்காக ஜெபியங்கள்
- வாலிபர்களுக்காக நடைபெற உள்ள முகாமில் அநேக வாலிபர்கள் தங்கள் வாழ்க்கையை இயேசுவுக்காக அர்ப்பணிக்க ஜெபியுங்கள்.
- பணித்தளத்தில் 40 நாட்கள் உபவாசமிருந்து ஜெபிக்கும் நமது பீல் விசுவாசிகள் ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்
- தூத்துக்குடியிலிருந்து பணித்தளத்தினை பார்வையிடச் செல்லும் W.M.E சபை **பாஸ்டர். எட்வர்ட் சாம்ராஜ்** மற்றும் A.G. சபை **பாஸ்டர். ராஜாராம்** அவர்களுக்காக ஜெபியங்கள்.
- இந்த மார்ச் மாதத்தில் காயல்பட்டினம் சி.எஸ்.ஐ ஆலயத்தில் நடைபெறவுள்ள மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனைகளுக்காவும் ஜெபியுங்கள்.

*நாங்களும் உங்கள் ஒவ்வொருவருக்காகவும்*
*மிக பாரத்துடன் ஜெபித்து வருகிறோம்.*

# ` ôúXôm ETYôNd áÓûL

இடம்

**தலைமை அலுவலகம் அன்பு பகிர்வு இயக்கம்,**
5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு,
தூத்துக்குடி – 628 008.

| நாள் | நேரம் |
|---|---|
| **03 - 03 - 2012,** *சனிக்கிழமை* | **காலை 9.30 மணி முதல் 1.30 வரை** |

தேவ செய்தி

## *Rev. இம்மானுவேல் சுந்தர்சிங்*

போல்பேட்டை சி. எஸ். ஐ. ஆலயம், தூத்துக்குடி

ஆதரவாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு தேசத்திற்காகவும்,
ஊழியங்களுக்காகவும் ஜெபிக்க அன்புடன் அழைக்கிறோம்.
தேவன்தாமே உங்கள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக!

தொடர்புக்கு

**தலைமை அலுவலகம் அன்பு பகிர்வு இயக்கம்,**
5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு,
தூத்துக்குடி – 628 008. போன் : 0461 –2375468

*நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள் மத் : 5 : 14*

**மகிமையின் இயேசு மாறாதவர் ஊழியங்கள் நடத்தும்**

# ®ÓRûXI ùTÚ®Zô

இடம்

**பேரீஸ் ஹால்,** மடத்துவிளை, ஆறுமுகநேரி.

நாள்


**2012 மார்ச் 23,24,25**

*வெள்ளி, சனி, ஞாயிறு*

நேரம்

**மாலை 6.30 மணி**


**முதல் 9.00 வரை**



தேவ செய்தி :

***Rev. எலிசா அன்பு***

***Rev. தேவதாஸ்***



இனிமையான பாடல்கள்,

தேவபிரசன்னத்தை உணரும் ஆராதனை,

உயிர்ப்பிக்கும் தேவ செய்திகள்,

பெலனடைய குடும்பமாய் அழைக்கிறோம்.

தொடர்புக்கு :

**சகோ. கிறிஸ்டின் கெனிஸ்டின்,**


**மகிமையின் இயேசு மாறாதவர் ஊழியங்கள்,**

ஆறுமுகநேரி. போன் : 9865671152, 9488104091

# சார்லஸ் வெஸ்லி (1707–1788)

*மிஷனெரி முன்னோடிகள்*

**சார்லஸ் வெஸ்லி,** சூசன்னா வெஸ்லிக்கும் சாமுவேல் வெஸ்லிக்கும் இங்கிலாந்து லிங்கன்ஷயரில் உள்ள எப்பொர்த்தில் 1707ம் ஆண்டு டிசம்பர் 18ம் தேதி பிறந்தார். சார்லஸ் வெஸ்லியின் பெற்றோர்களுக்கு 19 குழந்தைகள் பிறந்தனர். அவர்களில் 10 பேர் மட்டுமே உயிர் வாழ்ந்தனர். (3 மகன்கள் மற்றும் 7 மகள்கள்). இவரது தாய் சூசன்னா வெஸ்லி கண்டிப்பும் அன்புள்ளமும் கொண்டவர். இவர் பிள்ளைகளை தேவ பக்தியிலும் ஒழுக்கத்திலும் வளர்க்க எடுத்த முயற்சிகளை எளிதாக விவரிக்க முடியாது. பிள்ளைகள் 5 – வயதை அடையும் வரை அவர்களுக்குக் கல்வியறிவை புகட்டவில்லை. ஒவ்வொரு நாளும் காலை 9 முதல் 12 வரையும் மாலை 2 முதல் 5 வரையும் தன் சிறு குழந்தைகளுக்குக் கல்வி கற்றுக் கொடுத்து வந்தார். ஆங்கில எழுத்துக்களைக் கற்றுக்கொடுத்து, அவர்களை ஆதியாகமம் முதல் அதிகாரத்தை வாசிக்கும்படி கற்றுக் கொடுப்பார். ஒவ்வொரு நாள் மாலையிலும் தனது அறைக்கு தனது ஒரு அல்லது சில பிள்ளைகளை அழைத்து அவர்களுடன் அமைதியாக உறவாடி ஜெபிப்பார். தங்கள் தாயோடு இந்நேரத்தை கழிப்பதை பிள்ளைகள் அதிகம் நேசித்தனர். இப்பரிசுத்த தாயின் செயல் மாபெரும் ஆசீர்வாதங்களை பிள்ளைகள் வாழ்வில் கொண்டு வந்திருக்கும். இத்தாயின் வாழ்க்கை அநேகருக்கு முன் மாதிரியாக அமைந்துள்ளது.



ஜாண் வெஸ்லியும் சார்லஸ் வெஸ்லியும் பிறந்த பொழுது இங்கிலாந்து தேசம் மாக சீர்கேட்டினால் நிறைந்திருந்தது. மாலை இருண்ட பிற்பாடு வெளியில் செல்வது பாதுகாப்பற்றதாக இருந்தது. அக்காலத்தில் காவல்காரர்கள் ஏற்படுத்தப்படவில்லை. வெளியில் செல்லும் துன்மார்க்கக் கூட்டம் திருடுவதிலும், பிறரைத் தாக்குவதிலும், கொலை செய்வதிலும் ஈடுபட்டனர். குடிவெறியும் விபச்சார பாவங்களும் கொடி கட்டிப் பறந்தன. குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த நீதிபதிகள் கடும் தண்டனைகளை விதித்தனர். குழந்தைகளும் தூக்கிலிடப்பட்டனர். ஒரு சிறு குற்றத்திற்காக 9 வயது சிறுவன் தூக்கிலிடப்பட்டான். கல்வியறிவு மிகவும் குறைவாக இருந்தது. ஒரு சிலருக்குத்தான் வாசிக்க அல்லது எழுதத் தெரியும். இங்கிலாந்து முழுவதும் இருளடைந்து சீர்கெட்டிருந்தது. இக்காலத்தில் தேவன் ஜாண்வெஸ்லியையும் சார்லஸ் வெஸ்லியையும் கொண்டு இங்கிலாந்து தேசத்தை சீர்ப்படுத்தினார். சார்லஸ் வெஸ்லி ஆக்ஸ்போர்டில் உள்ள வெஸ்ட்மினிஸ்டர் பள்ளியில் கற்றார். சார்லஸ் 1727ஆம் ஆண்டு ஆக்ஸ்போர்டு மெதடிஸ்ட் என்ற குழுவை சக மாணவர்களிடையே உருவாக்கினார். இக்குழுவில் ஜாண் வெஸ்லியும் 1729 ஆம் ஆண்டு இணைந்து கொண்டார். ஜார்ஜ் ஒயிட்பீல்டும் இந்த குழுவில் சேர்ந்தார். இலக்கியம் மற்றும் மொழிகளில் முதுகலைப்பட்டம் பெற்றபிறகு, 1735 ஆம் ஆண்டு சார்லஸ் தனது தந்தை மற்றும் சகோதரன் ஜாண் உடன் சபையில் ஊழியம் செய்தார்.

கவர்னர் ஜேம்ஸ் வேண்டுகோள்படி சார்லஸும், ஜானும் பிரிட்டிஷ் அமெரிக்காவில் உள்ள ஜார்ஜியா காலனிக்குச் சென்று, 1735 ஆம் ஆண்டு ஊழியம் செய்தனர். 1736 ஆம் ஆண்டு சார்லஸ் சபை குருவானவராக செயின்ட் சைமன்ஸ் தீவுக்கு சென்றார். சார்லஸ் 1736ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கே திரும்பிவந்து, St. மேரிலிபோன் திருச்சபையைச் சுற்றியுள்ள பகுதியில் வாழ்ந்து, ஊழியம் செய்தார்.

அவர்கள் இருவரும் பல இடங்களுக்குச் சென்று மனந்திரும்புதல், கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசம் போன்றவற்றின் அவசியம் குறித்துப் பேசினார்கள். அவர்களுடைய இந்தப் பேச்சு சில பிஷப்புகளுக்கும் குருவானவர்களுக்கும் பிடிக்கவில்லை. அதனால் 1738 ஆம் ஆண்டு பெரும்பாலான ஆங்கில சபைகள் அவர்களை பிரசங்கிப்பதற்கு அனுமதிக்கவில்லை. அதற்குப் பின் அவர்கள் வயல்புறங்களிலும் தெருக்களிலும் சிறைச்சாலைகளிலும் பிரசங்கித்தனர். ஏழை ஜனங்கள் மகிழ்ச்சியுடன் அவர்களை ஏற்றுக்கொண்டு பிரசங்கங்களைக் கேட்டனர்.

1749 ஆம் ஆண்டு சார்லஸ் வெஸ்லி சாராள் என்பவரை மணந்தார். சாராவும் சுவிசேஷ ஊழியத்தில் இணைந்து சார்லஸுக்கு உதவி செய்தார். சார்லஸுக்கும் சாராளுக்கும் எட்டு குழந்தைகள், அவர்களில் சார்லஸ் வெஸ்லி Jr., சாமுவேல் வெஸ்லி, சாராள் வெஸ்லி ஆகிய மூன்று பேரும் உயிரோடிருந்தனர்.

மெத்தடிஸ்ட் வட்டாரத்தில் சார்லஸ் வெஸ்லி ஒரு இனிமையான பாடகர் என்று அறியப்பட்டிருந்தார். தனது இளம்பிராயத்தில் பாமாலைப் பாடல்களை எழுதத் தொடங்கிய அவர், தன்னுடைய வாழ்நாள் முழுவதும் எழுதினார். ஏறக்குறைய 6,500க்கும் மேலான பாமாலைப் பாடல்களை எழுதியுள்ளார். அந்தப் பாடல்கள் அனைத்தும் தேவன் மேல் உள்ள அவருடைய உறுதியான நம்பிக்கையையும் சக மனிதர்கள் இரட்சிக்கப்படுவதற்கு அவர் காட்டிய வாஞ்சையையும் வெளிப்படுத்துகிறது. அவர் எழுதிய பாமாலைகளில் பிரபலமானவைகளின் தலைப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**"எந்தன் ஆத்தும நேசரே"** **"கேள்! ஜென்மித்த ராயர்க்கே"**

**"என்னோடிரும் மாநேச கர்த்தரே"** **"பிளவுண்ட மலையே"**

**"நான் பாவிதான்"**

அவருடைய பாமாலைகளில் 150 பாமாலைகள் மெத்தடிஸ்ட் பாடல்கள் புத்தகமாகிய "பாமாலைகளும் சங்கீதங்களும்" என்ற புத்தகத்தில் உள்ளது. மெத்தடிஸ்ட் பாமாலை பாடல் புத்தகத்தில் இருந்து அவரின் பல பாமாலை பாடல்கள் மற்ற மொழிகளுக்கும் மாற்றப்பட்டுள்ளன.

சார்லஸ் வெஸ்லி எழுதிய விலை மதிப்பற்ற பாமாலைகளில் ஒன்றான எந்தன் ஆத்தும நேசரே என்பதைப் பற்றி ஹென்றி வார்டு பீச்சர் கூறும்போது, இந்தப் பூமியில் இருந்த அரசர்கள் பெற்றிருந்த புகழைப் பார்க்கிலும் நான் இந்தப் பாமாலை பாடலை எழுதியிருந்திருக்கலாம் என்று கூறினார்.

"எந்தன் ஆத்தும நேசரே" என்ற பாமாலை பாடலின் பின்னணி: ஒரு நாள் இரவு தூங்கிக் கொண்டிருந்த சார்லஸ் வெஸ்லி, புயல் சத்தம் கேட்டு எழுந்து, ஜன்னலைத் திறந்தார். திடீரென்று ஒரு பறவை காற்றினிமித்தம் களைப்படைந்து, ஒரு பருந்தினால் துரத்தப்பட்டு, பாதுகாப்பிற்காக திறந்த ஜன்னல் வழியாக பறந்து வந்து சார்லஸ் வெஸ்லியின் மார்பில் வந்து அமர்ந்தது.

பறவையை பாதுகாப்பான இடத்தில் வைத்த அவர் தனது இருக்கையில் அமர்ந்து, பாதுகாப்பையும் இளைப்பாறுதலையும் தேடி அலையும் மனித ஆத்துமாக்களுக்கு இயேசு அடைக்கலமாகவும், ஆறுதலாகவும், பாதுகாப்பாகவும் இருக்கிறார் என்று எழுத ஆரம்பித்தார்.

சார்லஸ் வெஸ்லி 1788 ஆம் ஆண்டு மார்ச் மாத் 29ஆம் தேதி, தனது 81 வது வயதில் மரித்தார். அவர் மரிப்பதற்கு முன்பு தன் மனைவியிடம் நான் ஐக்கியப்பட்டிருந்த ஆங்கிலிக்கன் சபை கல்லறைத் தோட்டத்தில் அடக்கம் பண்ண வேண்டும் என்று சொன்னார். அதன்படி அவருடைய சரீரம் லண்டன் மேரிலி போன் கல்லறைத் தோட்டத்தில் அடக்கம் பண்ணப்பட்டது.

## SHALOM CHARITY MISSION
## ஷாலோம் சேரிட்டி மிஷன்

தேவனுடைய பெரிதான கிருபையால் கடந்த 19 ஆண்டுகளாக தேவன் தந்த Sharing Love Mission (அன்பு பகிர்வு இயக்கம்) மூலமாக 1 கோடி பீல் ஆதிவாசி மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கவும், சீஷர்களாக்கவும், ஊழியர்களை எழுப்பவும், சபைகளைக் கட்டவும் தேவன் கிருபை தந்து, ஆயிரம் ஆயிரமாக ஆசீர்வதித்து வருகிறார்.

அதே வேளையில் நம் விசுவாசக் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கல்வி வசதிக்காக பள்ளிக்கூடங்கள், விடுதிகள் கட்டப்படவும் மற்றும் சுகாதார மருத்துவத் திட்டங்களும், பயிற்சி முகாம்களும் நடத்தப்படவும் வேண்டும். மேலும் குடிநீர் வசதி செய்து கொடுத்தல், சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள், பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள் போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். நமக்கு வரும் நிதி உதவியில் மூன்றில் ஒரு பங்கு மேற்கண்ட திட்டங்களுக்காகவே செலவிடப்படுகின்றது. இன்னும் வரும் காலங்களில் மிக அதிக அளவில் இவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். குறிப்பாக சுமார் 10 ஆயிரம் பீல் ஆதிவாசி மாணவர்களுக்கு **"கல்வி அறிவு வளர்ச்சி"** திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.

இதற்காக **ShalomCharity Mission** – என்ற இயக்கம் பதிவு செய்யப்பட்டு சமுதாய முன்னேற்றப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது. **Sharing Love Mission** சுவிசேஷப் பணி மற்றும் சபை காரியங்களை மட்டும் கவனித்து செயல்படும். **Shalom Charity Mission –** மற்ற சமுதாய முன்னேற்ற பணிகளையும், குழந்தைகளின் கல்விப் பணிகளையும் கருத்தாகத் திட்டமிட்டு, நிதிகளை சேகரித்து திறம்பட செயல்படும். Hostel பணி, Education பணி, Literature Fund மற்றும் இதர சமூக சேவை பணிகளுக்கு நிதி உதவி செய்யும்போது **Shalom Charity Mission –** என்ற பெயருக்கு அனுப்ப மிக அன்பாய் கேட்கிறோம்.

***மேலும் குழந்தை ஆதரவுத் தொகை*** அனுப்புவோர் **Shalom Charity Mission** – என்ற பெயருக்கே **D.D. or Cheque or M.O.** மூலமாகவோ அனுப்ப மிக அன்பாய் கேட்கிறோம்.

| | | |
|---|---|---|
| வங்கி கணக்கு | : | **SHALOM CHARITY MISSION** |
| **Axis** வங்கி கணக்கு எண் | : | **105010100096779 - Tuticorin Branch** |
| **TMB** வங்கி கணக்கு எண் | : | **174100710400061 - Tuticorin Branch** |

# காணிக்கை அனுப்பும் வழிகள்

⇨ தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.

⇨ M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.

⇨ D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை அனுப்பலாம்.

⇨ இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.

⇨ வெளிநாட்டில் வசிப்பவர்கள் **Bank Of Baroda** வங்கி மூலம் சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்பலாம். FCRA A/c. No.07080100002672 - Sharing Love Mission. IFS Code : BARB0TUTICO

---

**நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.**

வங்கி கணக்கு பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

---

Tamilnad Mercantile Bank
A/c. No. : 106100710400009
(I F S Code : TMBL0000106)

---

Axis (U.T.I) Bank
A/c. No. : 105010100094373
(IFS Code : UTIB0000105)

---

I.C.I.C.I Bank
A/C. No. 613901112799
(IFS Code : ICIC0006139)

---

ஆதரவாளர்கள் எங்களது வங்கிக் கணக்கில் காணிக்கை செலுத்தும் போது, உங்களது பெயரை கண்டிப்பாக கம்யூட்டரில் பதிவு செய்யும்படி ஒவ்வொரு முறையும் வங்கி அலுவலகரிடம் கூறி அதை உறுதி செய்து கொள்ளவும், இல்லையெனில் நீங்கள் செலுத்தும் காணிக்கை யார் செலுத்தியது என்ற விபரம் எங்களுக்கும் தெரியாமல் போக வாய்ப்புள்ளது.

## நாட்டு நடப்புச் செய்திகள்....

கடந்த மாதம் இஸ்ரேல் தூதரக் கார் காந்த வெடிகுண்டு மூலம் தகர்க்கப்பட்ட சம்பவத்தில் இஸ்ரேல் தூதரகப் பெண் அதிகாரி டால் யெஹோசுவா காயம் அடைந்தார். டெல்லியில் ஒரு தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்ற அவர், மேல் சிகிச்சைக்காக இஸ்ரேல் கொண்டு செல்லப்பட்டார். அங்கு ஒரு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

---

கடந்த பிப்ரவரி 6ம் தேதி பிலிப்பைன்ஸில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிக்கி பலியானவர்களின் எண்ணிக்கை 113 ஆக அதிகரித்துள்ளது. நில நடுக்கம், ரிக்டர் அளவுகோலில் 6.9 ஆக பதிவாகி இருந்தது. 61 பேர் மயக்கமாகி உள்ளதாகவும், அவர்களை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் பிலிபைன்ஸ் சிவில் டிபென்ஸ் தெரிவித்துள்ளது.

---

சாப்பிடாமல் இருத்தல் உடலுக்கு நல்லதா அல்லது கெட்டதா என்ற விவாதத்திற்கு தீர்வு கிடைக்காத நிலையில், வாரத்திற்கு இரண்டு நாட்கள் சாப்பிடாமல் இருந்தால் நீண்ட நாட்கள் வாழலாம் என்பது ஆய்வில் தெரிய வந்துள்ளது. வாரத்திற்கு இரண்டு நாட்கள் சாப்பிடாமல் இருந்தால் அல்சைமர், பார்கின்சன் நோய்த்தாக்குதலிலிருந்து காத்துக் கொள்ளலாம். மேலும் சாப்பிடாமல் இருக்கும்போது, மூளைப் பகுதியில் உள்ள வேதியியல் மெசெஞ்சர்கள் செயல்பட தூண்டப்படுகின்றன. எலிகளிடம் இதுகுறித்து சோதனை மேற்கொண்டதாகவும், மனிதர்களிடம் இது போன்ற சோதனை மேற்கொள்வது மிக அரிது எனவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

---

கடந்த 19.02.2012 அன்று காலை பாகிஸ்தான் – ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் உள்ள பராசினார் பகுதி மார்க்கெட்டில் நடந்த மனித வெடி குண்டு சம்பவத்தில் பலியானோர் எண்ணிக்கை 39 ஆக உயர்ந்துள்ளது.

நன்றி : www.dinamalar.com


**எங்களுடன் தொடர்பு கொள்ள**

தலைமை அலுவலகம்

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in w eb site : www.shalommission.in**

## கிராம ஆலயம்

# டாடா வட்லா

## இராஜஸ்தான்



இராஜஸ்தான் மாநிலத்தில் பான்ஸ்வாடா மாவட்டத்தைச் சேர்ந்ததுதான் இந்த டாடா வட்லா கிராமமாகும்.

இந்த கிராமத்து மக்கள் இறந்த முன்னோர்களின் ஆவிகளை தெய்வமாக வணங்கும் பழக்கமுடையவர்கள். வியாதி ஏற்பட்டால் மந்திரவாதிகளை நாடுவார்கள். மேலும் சாராயம் போன்ற அனைத்து விதமான போதைப் பொருட்களுக்கும் அடிமைகளாக வாழுகின்றவர்கள். இந்த சூழ்நியையில் வாழ்ந்து வந்தவர்தான் சகோ. ஜாலம் டின்டோட்.

இவரது தாயார் சுமார் 10 ஆண்டுகளுக்கும் மேலாக பிசாசுகளின் பிடியின் காரணமாக வியாதிப்பட்டிருந்தார். பல்லாயிரம் ரூபாய் செலவு செய்து, மந்திரக் கிரியைகள் செய்தும் சுகம் கிடைக்கவில்லை. என்ன செய்வதென்று தெரியாத சூழ்நிலையில், இயேசு கிறிஸ்துவைக் குறித்து கேள்விப்பட்டு, அவர் மூலமாக சுகம் கிடைக்கும் என்று விசுவாசித்து, பக்கத்துக் கிராமத்தில் ஊழியம் செய்து வந்த ஊழியர் சகோ. பிரமோத் பட்டேல் அவர்களிடம் தனது தாயாரை அழைத்துச் சென்றார்.

ஊழியரும் இவரது தாயாருக்காக பாரத்துடன் ஜெபித்தபோது, அவரது உடலில் இருந்த எல்லாப் பிசாசுகளும் அவற்றின் தன்மைகளும் வெளியேறின. சரீரத்தில் பூரண சுகம் கிடைத்தது. இந்த அற்புதத்தைப் பெற்ற இந்தக் குடும்பத்தார் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டனர். அதன் தேவன் இவரை ஊழியத்திற்கு அழைக்கவே, அதற்கு ஒப்புக் கொடுத்து, ஷாலோம் ஊழியத்தில் இணைந்தார்.

2005ம் ஆண்டு ஷாலோம் சுதேச ஊழியர் பயிற்சி முகாமில் பயிற்சி பெற்று ஊழியம் செய்து வருகிறார். தேவனை ஆராதிக்க ஆலயம் தேவை என்பதை உணர்ந்த சகோ. ஜலம் டின்டோட் தனது சொந்த கிராமத்தை ஆலயம் கட்ட காணிக்கையாக தரவே, அந்த இடத்தில் தேவ நாமம் மகிமைப்படும்படியாக ரூ. 1,20,000/– மதிப்பில் ஒரு அழகிய கிராம ஆலயம் கட்டப்பட்டு, சென்னை A.G. சபை போதகர் சாம் மார்க் அவர்கள் மூலம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்த ஆலயத்தில் தற்போது 25க்கும் அதிகமான குடும்பத்தார் தேவனை ஆராதித்து வருகின்றனர். இந்த கிராம ஆலயம் தூத்துக்குடியைச் சேர்ந்த சகோ. ***ஜேக்கப் பெரியகுமார்,*** மற்றும் மார்த்தாண்டத்தைச் சேர்ந்த சகோதரி ***செல்லத்தாய் ஜாண் ரோஸ்*** ஆகியோர் குடும்பத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதி உதவியின் மூலமாகக் கட்டப்பட்டதாகும்.

**ரூ. 2 இலட்சம் மதிப்பில் அல்லது ரூ. 1 இலட்சம் மதிப்பில் இந்த 2012ம் ஆண்டிற்குள் 100 ஆலயங்கள் கட்டிக் கொடுக்க முன் வருவோர் தேவை! ஜெபியுங்கள்!!**

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்



| | | |
|---|---|---|
| மாணவனின் பெயர் | : | **அர்ப்பன் பில்வாள்** |
| தந்தையின் பெயர் | : | நவல்சிங் பில்வாள் |
| தாயார் பெயர் | : | சவித்தாபேன் |
| பிறந்த நாள் | : | 01.10.1997 |
| படிக்கும் வகுப்பு | : | 6th Std., |
| சொந்த ஊர் | : | காயாவாட் |
| மாவட்டம் | : | தாகோத் |
| மாநிலம் | : | குஜராத் |

## மாணவனின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:—

அர்ப்பன் பில்வாள்—ன் பெற்றோர்கள் கடந்த 15 வருடங்களுக்கு முன்பான இயேசுவை அறியாமல் பூஜை செய்துகொண்டு இருளில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இந்நிலையில் இவர்களுடைய குடும்பத்தில் பிசாசின் சோதனையினால் அனைவரும் வியாதிப்பட்டு இருந்தார்கள். அப்பொழுது அநேக மந்திரவாதிகளிடம் சென்றும் நோயிருந்து விடுதலை கிடைக்கவில்லை. 15 நாட்களுக்கு ஒரு முறை பௌர்ணமி அன்று இவர்களுடைய வீட்டில் தானாக பாம்பு வரும். இவர்கள் அடிக்கப் போகும்போது போய்விடும். அப்பொழுது இவர் தன் வாழ்க்கையை வெறுத்து சாகலாம் என்ற முடிவை எடுத்தார். இந்த வேலையில் இவருடைய அண்ணி ரேமாபேன் இயேசுவைப் பற்றிக் கூறி லிலோர் கிராம சபைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு ஊழியர் ரமேஷ்பாய் அவர்கள் மூலம் தேவன் அவர்களுக்கு விடுதலையைக் கொடுத்தார். அற்புதத்தைப் பெற்ற இவர்கள் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு ஷாலோம் ஊழியத்தில் இணைந்து 12 வருடங்களாக ஊழியம் செய்து வருகிறார்.

**மாணவனைக் குறித்து :—** அர்ப்பன் பில்வாள் மிகவும் உற்சாகமான மாணவன். மிகவும் நன்றாக விளையாடுவான்.

**ஜெபியுங்கள்:—** இவன் நல்ல முறையில் படிக்க தேவன் விசேஷித்த ஞானத்தைக் கொடுக்கவும், நல்ல சுகத்திற்காகவும், தேவனுடைய பிள்ளையாக வளரவும் ஜெபியுங்கள்.

**மாணவனைத் தாங்குபவர் :— மகிமையின் இயேசு மாறாதவர் ஊழியம்** —ஆறுமுகநேரி

நீங்களும் மாதம் ரூ. 500/— கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரை ஜெபித்துத் தாங்க முன் வரலாம். இன்னும் 330 குழந்தைகளுக்கு ஆதரவாளர்கள் தேவை. உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்குவதற்கு அறிமுகப்படுத்துங்கள்.